# அடுத்த மாதத்தில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை அரசு பொறுப்பேற்கும்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

| ஈழநாடு சந்தா (தபால் மூலம் விநியோகம்) | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-50 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 8-00 |
| ஒரு வருடம் | ரூ. 82-00 | ரூ. 15-00 |

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 301
தேசிய தினசரி

| ஈழநாடு சந்தா (ஆள்மூலம் விநியோகம்) | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| மூன்று மாதம் | ரூ. 18-00 | 4-00 |
| ஆறு மாதம் | ரூ. 34-00 | 7-50 |
| ஒரு வருடம் | ரூ. 66-00 | 14-00 |

யாழ்ப்பாணம் கார்த்திகை 25 ஷவ்வால் 10 வியாழக்கிழமை (10-12-70)

கொழும்பு, புதன்

சகல ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகங்களை அரசாங்கம் கையேற்பதற்கான ஸ்ரீலங்கா அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனம் நிறுவுவதற்கான மசோதாவை இன்று ஆட்சி மன்றத்தில் வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தின சமர்ப்பித்தார்.

அடுத்த மாதத்திலிருந்து இக் கூட்டுத்தாபனம் இயங்குமென்று வர்த்தக அமைச்சர் திரு ரி. பி. இலங்கரத்தின தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் இக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புகள் பற்றி விளக்கினார்.

ஏற்றுமதி இறக்குமதியிலுள்ள வெளிநாட்டு நாணய மாற்று ஊழலை அகற்றவே இக் கூட்டுத்தாபனம் நிறுவப்படுவதாக அமைச்சர் கூறினார். செனட்சபை இந்த மசோதாவை நிராகரித்தால் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்று அவர் சொன்னார்.

மேலும் பல பொருட்களின் விலைகளை வீழ்ச்சியடையச்செய்து வாழ்க்கைச் செலவை இக் கூட்டுத்தாபனங்கள் மூலம் குறைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

சிறிய அளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கம் உதவியளிக்கும் என்றும் மக்கள் வங்கிமூலம் உதவி வழங்கப்படுமென்றும் அமைச்சர் உறுதி கூறினார்.

இந்த கூட்டுஸ்தாபனங்கள் அசைவற்ற அசைவுள்ள எந்த சொத்துக்களையும் தங்கள் தேவைக்கு எடுத்துக்கொள்ள உரிமையுடையதாக இருக்கும். இச் சட்டம் இவ்வுரிமையை அளிக்கும் வகையில் அமைந்திருக்கும். இந்த மசோதாவின் பிரகாரம் இறக்குமதி விநியோகம் ஆகியவற்றில் இந்தக் கூட்டுஸ்தாபனங்கள் ஒவ்வொன்றும் முழு உரிமையை உடையனவாய் இருக்கும். ஒரு குறிப்பிட்ட வர்த்தகம் செய்பவர்கள் அல்லது வர்த்தகத்தில் நஷ்டமடைந்தவர்களுக்கு மட்டுமே நஷ்டஈடு வழங்கப்படலாம் எனத் தெரிகிறது.

எப்படி இருந்த பொழுதிலும், இந்தச் சட்டத்தின் மூலம் பொறுப்பேற்கப்படும் சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும். ஆனால் இந்தச் சொத்துக்களை வாங்குவதற்கு அதன் சொந்தக்காரர் உண்மையாகச் செலவிட்ட பணமும், இந்த சொத்துக்கள் வாங்கிய காலத்தில் இருந்ததைவிட இச் சொத்துகள் வளர்ச்சி பெற்றிருந்தால் அதற்கு உண்மையாக உள்ள மதிப்பும் சேர்த்து நஷ்டஈடாக அளிக்கப்படும். அரசியல் அவதானிகளின் கருத்துப்படி சொத்துக்குரியவர்களுக்கு சந்தை நிலவரத்தின்படி நஷ்டஈடு வழங்கப்பட மாட்டாதென அறியப்படுகிறது.

மேலும் உணவுவகைகள் ஜவுளிகள், மருந்துவகைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்காக தனியாக கூட்டுஸ்தாபனங்களை அரசாங்கம் நிறுவ இருப்பதாக அரசாங்கச் செய்திகள் தெரிவித்தன.

# வடபகுதிக்கு லக்ஸபான மின்சாரம் கிடைத்தது

## சீமெந்துத் தட்டுப்பாடு நீங்கும் கிராமங்கள் ஒளிபெறும்

யாழ்ப்பாணம், வியாழன்

இதுவரை நிலவிவந்த மின்சாரச் சீர்கேடு இனிமேல் இராது. லக்ஸபான மின்சாரம் நேற்றுத் தொடக்கம் வடபகுதிக்குக் கிடைத்துள்ளது. மின் இணைப்பு வைபவம் ஆடம்பரமற்ற முறையில் நேற்று நடைபெற்றது.

அனுராதபுரத்திலிருந்து கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி தென்மராட்சி வலி-கிழக்கு வலி-வடக்கு ஆகிய பிரிவுகள் ஊடாகச் சுன்னாகத்திற்கும், காங்கேசன்துறைக்கும் இந்த மின்சாரம் செல்கிறது.

மஸ்கெலிய ஓயா மின் விநியோகத்தினால் யாழ்ப்பாணப்பகுதி மேலும் ஒளிமயமாகுமென்று எதிர்பார்க்... சில மாதங்களாகப் பல உள்ளூராட்சி மன்றப் பகுதிகளுக்கு இரவு 10மணிக்குப் பின்னரே மின்சாரம் கிடைத்தது. இக்கஷ்டம் இனிமேல் நீங்கிவிடுமென்றும், போதியளவு மின்சாரத்தைப் பொதுமக்கள் பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மின்கம்பத்தில்

...பட்டுள்ளதாவது:

''மஸ்கெலிய ஓயா மின்சாரத்தைக் கொண்டுவரும் கம்பிகளைத் தாங்கிநிற்கும் மின்கம்பங்கள் கிளிநொச்சியிலிருந்து பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி, வலிகாமம் கிழக்கு, வடக்கு ஆகிய பிரிவுகள் ஊடாகச் சுன்னாகம், காங்கேசன்துறை வரையும் நிறுத்தப்பட்டுள்ளன. மின் கம்பிகளைத் தாங்கிநிற்கும்

மாவை ஆலய விவகார வழக்கு

## 'ஆலயக் கதவுகளை திறக்கும் படி கூறினேன்'

### இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கதவு ஒரு தடவை திறக்கப்பட்டால் தொடர்ந்து திறக்கப்பட்டிருக்கவேண்டும் என ஏ. எஸ். பி. சில்வாவின் ஆலோசனையின் பேரில் நான் உத்தரவிடவில்லை. கதவை திறக்கும்படி நான் எதிர் மனுதாரர்களிடம் தெரிவித்தேன்.

மாவை ஆலய விவகாரம் பற்றிய வழக்கில் அட்வகேட் சி. சுந்தரலிங்கம் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியமளித்த இன்ஸ்பெக்... யேற்றத்தின்போது கோவில் கதவு திறந்திருந்தது?- எனக்குத் தெரியாது

வழ: கோயில் வேலையாட்களை உட்செல்ல விடும்படி உமக்கு ஆலோசனை கிடைத்திருந்தது?- ஆம்

வழ: மேளவாத்தியக்காரரையும் விடும்படி ஆலோசனை கூறப்பட்டிருந்தது?- ஆம்

வழ: அவர்கள் பிரதான வாசலால் செல்ல நீர் விடவில்லை?- கதவு மூடப்பட்டிருந்து

வழ: தெற்குப் பக்க வாசலால் செல்லவிட்டீரா?-

தோட்டத்

## தொழிலாளர் படிரூபா 17-50 விரைவில் தீர்ப்பதாக உறுதி

கொழும்பு, புதன்

தோட்டத் தொழிலாளர்களுக்கு விசேட வாழ்க்கைப் படியாக ரூ 17-50 வழங்குவது குறித்து தோட்டதொழிலமைச்சருடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்துவதாக தொழில் அமைச்சர் திரு எம். பி. டி. சற் ஸ்ரீவர்த்தன உறுதி தெரிவித்துள்ளார். தம்மைச் சந்தித்த தோட்டத் தொழிலாளர் யூனியன் தலைவர்களிடம் அவர் இந்த உறுதியை அளித்தார்.

திரு ஏ. அஸீஸ், திரு டி ஜி. வில்லியம், திரு எம். ஜி. மெண்டிஸ், எஸ். ஏ. மௌலானா ஆகியோரே அமைச்சரைச் சந்தித்தனர்.

பாகிஸ்தான் தேர்தல்

## அவாமிலீக் ஆட்சியை அமைக்கும்

### அறுதி பெரும்பான்மைக்கு இன்னும் 3 தொகுதி பாக்கி

கராச்சி, டிச. 9 கைப் பெற்றுவிட்டால் பில் 62 தொகுதிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விததேன்.

மாவை ஆலய விவகாரம் பற்றிய வழக்கில் அட்வகேட் சி.சுந்தரலிங்கம் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர்ஹொரத் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி என். வைத்திலிங்கம் முன்னிலையில் இவ்வழக்கு இரண்டாவது தினமாக நேற்று விசாரணை செய்யப்பட்டது.

மாவிட்டபுரம் ஆலயத்திற்குள் செல்வோரை தடுக்கக் கூடாதென, ஆதீனகர்த்தா துரைச்சாமி குருக்களுக்கும் அவரது ஏஜண்டு சி.சுந்தரலிங்கத்திற்கும் உத்தரவிடுமாறு கோரி அட்டோர்னி ஜெனரலால் தாக்கல் செய்யப்பட்டமனு விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

அட்வகேட் ஸி சுந்தரலிங்கம் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் ஹரத்தை குறுக்கு விசாரணைசெய்தார்

வழ: ஆலயக் கதவு திறக்கப்பட்டால் எல்லாருக்கும் எந்நெரமும் திறக்கப்பட வேண்டுமென்று கூறுனீர்?- நான் கூறவில்லை

வழ: 66-ம் ஆண்டுக்கு முன், சிறுபான்மை சமூகத்தினர் என்றுகூறப்படுவோர் உட்பிரகாரத்திற்குள்செல்லவில்லை?- அதுபற்றித் தெரியாது

வழ: 69-ம் ஆண்டு கொடி வழ: அவர்கள் பிரதான வாசலால் செல்ல நீர் விடவில்லை?-கதவு மூடப்பட்டிருந்து

வழ: தெற்குப் பக்க வாசலால் செல்லவிட்டீரா?- தெற்குப் பக்க வாசலினுல் சென்றனர்

வழ: உள்ளே செல்ல வேண்டியவர்களின் பெயர்களை கேட்டீரா?-ஆம்.

வழ: தென் வாசலால் உபயகாரர் செல்வதை எதிர்த்தீரா?- ஆம். அன்று திருவிழா நடத்திய உபயகாரர் செல்வதற்கு அனுமதித்தேன்

வழ; கொடியேற்றத் தினம் உபயகாரர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனரா?-ஞாபகமில்லை

வழ: அதற்கு பின்பும் உபயகாரர் விடப்படவில்லை?-ஞாபகமில்லை

வழ: கிழக்குப்பக்க வாசலால். 2ம் எதிர் மனுதார் செல்வதற்கு நீர் விடவில்லை? -அது பூட்டப்பட்டிருந்தது.

வழ: யார் பூட்டியது? -கோயில் நிர்வாகிகள்

வழ: எவரது ஆலோசனையில் பூட்டினுர்கள்?- 2வது எதிர் மனுதாரின் ஆலோசனைப்படி

வழ: கோயில் ஒரு முறை திறக்கப்பட்டால் தொடர்ந்து திறந்திருக்க வேண்டும் என்றீரா?- ஞாபகமில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

... இறது.

மஸ்கெலிய ஒயா மின் விநியோகத்திலுல் யாழ்ப்பாணப்பகுதி மேலும் ஒளிமயமாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் மின்சாரப் பற்றுக்குறை காரணமாக இயங்காமலிருந்த சூளை ஒன்றும் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் தெரிகின்றது.

கடந்த சில மாதங்களாக சீமெந்து உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக நிலவிய சீமெந்துத் தட்டுப்பாடு, லக்ஸபான மின்சாரம் கிடைத்ததைத் தொடர்ந்து அறவே நீங்கிவிடும் என்று சீமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுன்னுகம் மின்சாரநிலையமே லக்ஸபானு மின்சாரத்தை வடபகுதியின் சகல பகுதிகளுக்கும் விநியோகம் செய்யும். மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக கடந்த ...

## சோமவார உற்சவம்

தாவடி, புதன்

தாவடி அம்பலவாணவேத விநாயகர் ஆலயத்தில் சோமவார உற்சவம் நடைபெற்றது. 'இசைவாணி' திருமதி சரஸ்வதி பாக்கியராசாவின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற்றது.

... பொதுமக்கள் பெறமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மின்கம்பத்தில் தொடாதீர்

லக்ஸபான மின்சாரம் சம்பந்தமாக யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு ரி. முருகேசம்பிள்ளை எச்சரிக்கை விடுத்துள்ளார். அதில் லக்ஸபானு மின்சாரம் அதிவேகத்துடன் மின்கம்பி வழியாகச் சென்றுகொண்டிருப்பதால் மின்சாரக் கம்பங்களுடன் புழங்கிக்கொள்வதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

உதவி அரசாங்க அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் ... தெல்லிப்பழை, வலிகாமம் கிழக்கு, வடக்கு ஆகிய பிரிவுகள் ஊடாகச் சுன்னுகம், காங்கேசன்துறை வரையும் நிறுத்தப்பட்டுள்ளன. மின்கம்பிகளைத் தாங்கிநிற்கும் கம்பங்கள் மூலம் மின்சாரம் செல்கிறதா இல்லையா என்பது பற்றித் தெரிந்துகொள்ளச் சிறுவர்கள் அவற்றில் ஏறி விளையாடும்பொழுது அவர்கள் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். நேற்றுத் தொடக்கம் யாழ்ப்பாணப் பகுதி மின்கம்பிகள் வழியாக உத்வேகத்துடன் மின்சாரம் செல்லுமென்பதையும், மின் கம்பங்களுடன் எவராவது அணுகக் கூடாதென்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்."

(மாவி. நி.-கு. வி. ம.)

# ... அமைக்கும்

## அறுதி பெரும்பான்மைக்கு இன்னும் 3 தொகுதி பாக்கி

கராச்சி, டிச. 9

பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஷேக் முஜிபுர் ரஹுமானின் அவாமிலீக் மிகப்பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

அறுதிப்பெரும்பான்மையை பெறுவதற்கு இன்னும் 3 இடங்களை அவாமிலீக் கைப்பற்றியாக வேண்டும்.

செய்திஅச்சுக்குப்போகும் போது இன்னும் 5 தொகுதிகளின் முடிவுகள் வெளிவரவிருந்தன. கிழக்குப்பாகிஸ்தனில் அமோகவெற்றியைப்பெற்றுள்ள அவாமிலீக் இன்னும் மூன்று இடங்களைப் பெற்றுவிட்டால் ஷேக் முஜிபுர் ரஹுமான் ஆட்சிப்பொறுப்பை கையேற்கும் சந்தர்ப்பம்கிடைக்கும் இல்லையெனில் வேறு ஒரு கட்சியின் ஆதரவுடன் அவர் ஆட்சியை அமைப்பார். அவாமிலீக்கிற்கு இதுவரை 148 தொகுதிகளில் வெற்றி கிட்டியுள்ளது. மேற்குப் பாகிஸ்தானில் முன்னுள் வெளிநாட்டமைச்சர் திரு சுல்பிகார் அலிபுட்டோவின் இடதுசாரி மக்கள் கட்சி இதுவரை 81 இடங்களைக் கைப்பற்றியிருப்பதாக செய்திகள் கூறின. பஞ்சாப்பில் 62 தொகுதிகளையும் சிந்து பகுதியில் 18 தொகுதிகளையும் பூட்டோவின் கட்சியைப் பற்றியிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் சூருவளிக்கு இலக்கான பகுதிகளில் இன்னும் தேர்தல் நடைபெறவில்லை இப்பகுதிகளிலும் ஷேக் முஜிபுர் ரஹுமானுக்கு பெரும்பான்மை ஆதரவிருக்கும் என்று கருதப்படுகின்றது அங்கும் தேர்தல் நடந்தால் ஷேக் முஜிபுர் ரஹுமான் அறுதியான பெரும்பான்மை பெற்று பிரதமமந்திரியாகப் பதவியேற்கக்கூடும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

## வட்டுக்கோட்டைத் தேர்தல் ஆட்சேபவழக்கு

# எதிர்மனுதாரின் ஆட்சேபம் பற்றிய தீர்ப்பு ஒத்திவைப்பு

## 2-ம் குற்றச் சாட்டு பற்றிய விசாரணை ஆரம்பமானது

யாழ்ப்பாணம், வியா.

மனுவில் தெரிவிக்கப்பட்ட முதலாவது குற்றச் சாட்டின் பேரில் எதிர் மனுதாரின் வழக்கறிஞர் சர்வானந்தா தெரிவித்த ஆட்சேபம் பற்றிய விசாரணை நேற்றுக்காலை முடிவடைந்தது இந்தஆட்சேபம் பற்றிய தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் தேர்தல் நீதியரசர் பண்டித குணவர்த்தன முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணை ஆரம்பமானது எதிர் மனுதாரின் வழக்கறிஞர் சர்வானந்தா சட்ட நூல்களை ஆதாரம் காட்டி வாதாடினுர் இதை தொடர்ந்து ஆட்சேபம்பற்றிய தீர்ப்பை நீதியரசர் ஒத்திவைத்தார்

மனுவில்தெரிவிக்கப்பட்ட இரண்டாவது குற்றச்சாட்டு பற்றிய விசாரணை ஆரம்பிக்கப்பட்டது மனுதாரின் வழக்கறிஞர் எம். திருச்செல்வம் கியூ. சி. இரண்டாவது குற்றச்சாட்டு பற்றி விளக்கி கூறியபின் மனுதார் சார்பில் முதலாவது சாட்சியாக வடபிரதேச கல்வியதிபதி எஸ். சங்கரலிங்கம் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினராக ஆ. தியாகரரசாதெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து சின்னத்தம்பிஆனந்தகுமாரசாமி ஆட்சேபமனுக்கள் தாக்கல் செய்திருந்தார் வழக்கு செலவுத் தொகை சம்பந்தமாக தவருன விவரங்கள் அடங்கியஅறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததாக முதல் ஆட்சேப மனுவிலும் எதிர் மனுதார் தேர்தல் நடந்த காலத்தில் அரசாங்க ஊழியராக இருந்ததனுல் அவரது தெரிவு செல்லுபடியாகாதென்றும் இரண்டாவது மனுவிலும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

வட பிராந்திய கல்வியதிபதி எஸ். சங்கரலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது கல்வி பகுதியில் 27 வருடங்களாக கடமையாற்றி வருகிறேன்தனியார் பாடசாலைகளை பொறுப்பேற்க ஒரு சமயம் அரசாங்கம் சட்டம் கொண்டுவந்தது தெரியும் இச்சட்டத்தின்படி காரைநகர் இந்துக் கல்லூரி பொறுப்பேற்கப் பட்டது. பொறுப்பேற்கும் உத்தரவு வழங்கப்பட்டபின் ஆசிரியர்களின் நிலையை அறிவதற்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. எதிர்மனுதார் அரசாங்கச் சேவைக் கமிஷனுல் நியமனம் செய்யப்பட்டார். நியமனக் கடிதம் அரசாங்க சேவைக் கமிஷனுல் அனுப்பப்பட்டது. பதவி உயர்வும் அரசாங்க சேவைக் கமிஷனுல் செய்யப்பட்டது. 28-12 66 கடிதத்தின் மூலம் முதல் தர அதிபராக உயர்வு பெற்ருர்.

31-1-70ல் எதிர்மனுதாரான தியாகராசாவிடமிருந்து கல்வியதிபதிக்கு பொதுசேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு அனுமதி கோரி கடிதம் ஒன்று வந்தது. இந்தக் கடிதம் திறைசேரி காரியதரிசிக்கு அனுப்பப்பட்டது. பின்னர் 16-3-70ல் எதிர்மனுதாரிடமிருந்து மற்ருெரு கடிதம் கல்வியதிபதிக்கு வந்தது. அதில் 27-3-70 முதல் ஓய்வு பெறுவதாக கூறப்பட்டிருந்தது. 22-3-70 முதல் கல்வி அதிபதியால் ஓய்வு வழங்கப்பட்டது அரசாங்கசேவைக் கமிஷனிடமிருந்து உத்தரவு வந்ததாக அவரது பயிலில் இல்லை. கல்விமா அதிபரிடமிருந்து எதிர்மனுதார் ஓய்வு பெறுவதற்கு அனுமதி வழங்கும் கடிதம் வரவில்லை. கல்விமாஅதிபரின் 12-5-70 கடிதத்தில் எதிர்மனுதாரின் ஓய்வு பற்றி அரசாங்க சேவைக் கமிஷனின் குறிப்பு இல்லை. அரசாங்க சேவைக் கமிஷனிடமிருந்து கடிதமும் வரவில்லை

எதிர்மனுதாரின் வழக்கறிஞர் சர்வானந்தா சாட்சியமளித்த எஸ், சங்கரலிங்கத்தை குறுக்கு விசாரணை செய்தார்

வழ: இன்று எதிர்மனுதார் அதிபராக இருக்கிருரா?-இல்லை

வழ: 22-3-70 முதல் காரைநகர் இந்துக்கல்லூரி அதிபராக யார் இருந்தார்?- கே சுப்பிரமணியம் என்பவர்.

(4ம் பக்கம் பார்க்க)

# 'செனட் ஒழிக்கப்பட்டால் அ நி. சபை அவசியமில்லை'

## ஆட்சிமன்றத்தில் எஸ். ஜே. வி,

கொழும்பு, புதன்

'அரசியல் நிர்ணயசபைக்கு நிதி ஒதுக்கியிருப்பது அவசியமில்லை, செனட்டை ஒழித்துக்கட்டிய பின் புதிய அரசியல் அமைப்பை இந்த ஆட்சிமன்றமே நிறைவேற்றிக்கொள்ள முடியும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் பயன்படுத்தி புதிய அரசியல்அமைப்பு சட்டத்தை அரசு நிறைவேற்றிக் கொள்ளலாம்,

இவ்வாறு தமிழரசுக்கட்சி தலைவரும் காங்கேசன்துறை எம் பி யுமான திரு எஸ் ஜே வி செல்வநாயகம்இன்றுஅரசியல் விவகார அமைச்சின் மான்ய ஒதுக்கீடு விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில்மேற்கண்டவாறுகூறினுர்,

இப்போதுள்ள அரசியல் நிர்ணயசபை புதியஅரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதற்குத்தான் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் ஆனல் இந்த வேலையைஅட்டோர்ணிஜெனரல் இலாகாவே செய்துமுடிக்க முடியுமென்றும் கூறினுர்,

திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தின் பேச்சிற்கு பதிலளித்து அரசியல் நிர்ணய விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா பேசுகையில் காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினரும் அவரது கட்சியினரும், அரசியல் அமைப்பு நிர்ணயசபை அமைப்பதற்கு ஆதரவு அளித்துவிட்டு இப்பொழுது இப்படிப் பேசுவதில் அர்த்தமில்லை, இந்தச் சபையை உருவாக்கும் பொழுதே இந்த விடயத்தைச் சொல்லியிருக்க வேண்டும், ஆனல் அந்த சபையை உருவாக்கும் பொழுது இதனைச் சொல்லாமல் இப்பொழுது இப்படிச் சொல்வது விசித்திரமாக இருக்கிறதெனக் கூறினுர்.

# பல்கலைக்கழக அனுமதிப்பிரச்னை நீதிமன்றம் செல்லும்?

## யாழ்ப்பாணத்தில் இன்று மகாநாடு

பருத்தித்துறை, புதன்

அண்மையில் நடந்த பல்கலைக்கழகப் பொறியியல் மருத்துவ மாணவர் அனுமதி பற்றிய விபரங்களை நீதிமன்றம் மூலம் அறிவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. பிரபல தமிழ் கியூ. சி. ஒருவர் பாதிக்கப்பட்ட மாணவரின் பெற்ருேரை கொழும்புக்கு வருமாறு அறிவித்துள்ளார். இதற்கிடையில் யாழ். பெற்ருர் சங்கம் தலைவர் திரு. கே. நேசையா தலைமையில் இதே விடயம் பற்றி யாழ். நகரமண்டபத்தில் கூடி ஆராயவிருக்கின்றது. இன்று மாலை நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் திரு. எஸ். பொன்னையா சம்பந்தப்பட்ட பெற்ருருக்கு அறிவித்துள்ளார். இந்தியாவில் இதே விதப் பிரச்னைகளுக்கு நீதிமன்றம் மூலம் தீர்வு காணப்பட்டதாகவும் வழக்கறிஞர் சிலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனராம்.

# சுழிபுரம் கி. ச. தேர்தல் வெற்றி பெற்றேர்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபைக்கான தேர்தல் இன்று அமைதியாக நடைபெற்றது. மொத்தம் பதின்மூன்று வட்டாரங்களைக்கொண்ட இக் கிராமசபைக்கு பதினுராம் வட்டாரத்துக்கு மட்டும் ஒருவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். தற்போதைய கிராமசபைத் தலைவர் திரு சு. கந்தசுவாமி ஏழாம் வட்டாரத்தில் 121 மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார். வெற்றி பெற்றவர்கள் விபரம் வருவாறு:

1-ம் வட்டாரம்; வே. கிருஷ்ணர். 2-ம்வட்டாரம்: வ. அமிர்தலிங்கம், 3-ம்வட்டாரம்: வ. பொன்னுத்துரை, 4-ம் வட்டாரம்: செ. வீரபத்திரன், 5-ம் வட்டாரம்: கு. பொன்னுத்துரை, 6-ம் வட்டாரம்: மு. வரதராசா, 7-ம் வட்டாரம்: திரு சு. கந்தசுவாமி. ஜே. பி. (தற்போதைய தலைவர்), 8ம் வட்டாரம்: அ. நன்னித்தம்பி, 9-ம் வட்டாரம் செ, வடிவேலன், 10-ம் வட்டாரம்: மா, பொன்னுச்சாமி, 11-ம் வட்டாரம்: திரு அ. ஆறுமுகம் (போட்டியின்றித் தெரிவு), 12-ம் வட்டாரம்: த. பொன்னுத்துரை, 13-ம் வட்டாரம்: இ. சின்னத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: கே. எச். பி. ஜெயசேகரா, 278, காங்கேசன் துறை வீதி, சிவன்கோவில் சந்தி, யாழ்ப்பாணம். 2557

### விற்பனைக்கு

நயினாதீவிலுள்ள பள்ளி வாசலுக்கு அண்மையில் சுமார் 25 பரப்பு வருமான தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பென்சி பெலஸ், மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2554

### பயிற்சி

மோட்டார் றிவைன்டிங் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு: இன்டஸ்றியல் இருவ்ஸ் இன்ஸ்ரிரியூட், 443/5, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 2553

### நன்றிநவிலல்

டாக்டர் சபாபதிப்பிள்ளை குலத்துங்கமும் டாக்டர் (திருமதி) மனோரஞ்சிதம் குலத்துங்கமும் 26-11-70ல் தங்கள் இல்லத்தில் நடைபெற்ற தமது விவாக வைபவத்திற்கு நேரடியாகச் சமூகமளித்து ஆசிர்வதித்தும், அன்பளிப்புச் செய்தும், வாழ்த்துக்கள் அனுப்பியுஞ் சிறப்பித்த அன்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் தங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர். 2561


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்டு 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்டு 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்டு 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நாலேயசந்தி. இரவு 5-15 வாத்தியஇசை...

## இன்றைய பலன்

கார்த்திகை மீ 25-ந் திகதி (10-12-70)

மேஷம்- இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். மனக்குமைச்சல்களினுல் வேதனைப்படுவீர்கள். தெய்வநம்பிக்கை வேண்டும்.

ரிஷபம்- பிறருக்கு உதவுவதில் முன் நிற்பீர்கள். இதன் மூலம் பணம் செலவாகும். அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்ட தினம்.

மிதுனம்- உறவுமுறைகளில் பிளவுகளே தென்படும். மனதில் உற்சாகம் குன்றும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

கடகம்- நீண்ட நாள் பிரச்னைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும். தாய்வழி மூலம் தனவரவுக்கும் இடமுண்டு. முன்னேற்றமான தினம்.

சிம்மம்- செய்தொழிலால் சிறப்புண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம்.

கன்னி- சிறுவரும்கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். பொறுமை வேண்டும்.

துலாம்- எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும். விந்தையானபோக்கு வேடிக்கை காட்டும்.

விருட்சிகம்- எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக் கூடும். நிதானம்தேவை.

தனுசு- பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் உண்டு. இலட்சியப்பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

மகரம்- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். புத்திர வழியாலும் புகழும் கிடைக்கும்.

கும்பம்- கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். நிம்மதியானதினம்.

மீனம்- பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம். முகமன் பேசுவோர் விஷயத்தில் முன்னெச்சரிக்கை...

யாழ்ப்பாணத்தில்

## பதுளை 'யூவிட்ஸ்' நாளை மோதுகிறது

யாழ்ப்பாணம், வியா. பதுளை 'யூவிட்ஸ்' உதைபந்தாட்ட விளையாட்டுக் கழகம் நாளையாழ்ப்பாணம் வருகின்றது. இக்கோஷ்டி யாழ். மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் நாளை கலந்துகொள்ளும்.

பதுளை மாவட்டத்தில் மிகவும் பலம் கொண்ட 'யூவிட்ஸ்' விளையாட்டுக்கழகத்தில் எம். ஹுசேயின் ஈ. பெர்ணண்டோ ஆகிய இரு அகில இலங்கை உதைபந்தாட்ட வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்கள். இவர்களுடன் பதுளை மாவட்ட தெரிவுக் கோஷ்டியில் தற்போது அங்கம் வகிக்கும் ஆறு வீரர்களும் இக்கோஷ்டியில் அங்கம் வகிக்கிறார்கள். 'யூவிட்ஸ்' கழகத்துக்கு வீரர் யு. ரி. ராஜா தலைமை தாங்குகின்றார்.

யாழ் மாநகர சபைக் கோஷ்டிக்கு வீரர் காந்தி அகஸ்ரின் தலைமை தாங்குகிறார்கள். இக்கோஷ்டியிலும் தற்போதைய யாழ் தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்களான எம். தேவதாஸ், கோமேந்திரன், அகஸ்ரின், நவப்ராசா, இராசையா, மணி அன்ரனி, பி. என். சால்ஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். யாழ் விளையாட்டரங்கில் நாளை மாலை இப்போட்டி நடைபெறும். (தே. நி)

## மழையினால் போட்டி நிறுத்தப்பட்டது

சாய்ந்தமருது, புதன் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை விளையாட்டரங்கில் கல்முனை தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் கிழக்கிலங்கைப் பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டி ஆடிய உதைபந்தாட்டப் போட்டி மழைபெய்தமையால் இடையில் நிறுத்தப்பட்டது.

கல்முனை தெரிவுக் கோஷ்டிக்கும், கிழக்கிலங்கை பொலிஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெறவிருந்த போட்டியும் மழை காரணமாக நிறுத்தப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

முசலி, வியாழன் முசலி கற்கடந்தகுளம், கிராமமுன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது கீழ்க்கண்டோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. அ. சந்தாம்பிள்ளை கொடுதோர், காரியதரிசி: திரு. மி. சந்தாம்பிள்ளை சில்வா, தனாதிகாரி: திரு. அ. சந்தாம்பிள்ளை டபரேரா, உபதலைவர்: திரு. டோ. அந்தோனி கோமஸ், உபகாரியதரிசி: திரு. தொ. பாக்கியநாதன். நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர் ப. அந்தோனி கொடுதோர், தொ. சந்தாம்பிள்ளை, அ. சந்தாம்பிள்ளை கோமஸ், ம. சவரி ஆகிய ஐவர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கிளிநொச்சி

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா கிளிநொச்சி விளையாட்டுச் சபையினால் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உப்புக் கூட்டுத்தாபனக் கோஷ்டி 5—0 கோல்களால் விவசாயப் பாடசாலைக் கோஷ்டியைத் தோற்கடித்தது. பரந்தன் ரசாயனக் கோஷ்டி 4—0 கோல்களால் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது.

இப்போட்டிகள் யாவும் கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்தில் நடைபெற்றன. (தே. நி)


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த

நெஞ்சிருக்கும் வரை


## கூட்டுறவுப் பண்ணை

கிளிநொச்சி, புதன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேலையில்லா திருக்கும் வாலிபர்கள் கூட்டுறவு முறையில் பண்ணஅமைக்கவுள்ளனர். பூநகரியில் 200 ஏக்கர் நிலத்தை இப் பண்ணை அமைப்பதற்காக அரசாங்கம் வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

# மண்டைதீவு

## தியாகராசா ஆசிரியர்

மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலை வசதிக் குறைவு பல விருப்பினும் பல ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தப் பெருமைக்கு அயராது உழைத்தவர் எங்கள் தலைமை ஆசிரியர் சின்னத்தம்பி தியாகராசா ஆவர்.

தியாகராசா ஆசிரியர் என்றால் கார்த்திகேய வித்தியாசாலையென்றும், கார்த்திகேய வித்தியாசாலையெனின் தியாகராசா ஆசிரியர் என்றும் இத்தீவு மக்கள் கருதுமளவுக்கு அவர் தம் சேவையமைந்தது. இவர் இவ்வாண்டுஇறுதியில் ஓய்வு பெறுகின்றார். இவர் உதவி ஆசிரியராக சேவையை ஆரம்பித்தவர். தலைம ஆசிரியராக 38 வருடங்கள் வரை கடமைபுரிந்துள்ளார். கடமையே கண்ணியம் மாணவர்களின் உயர்வே இலட்சியம் என்ற பண்பு உடையவர், ஓய்வு நேரங்களிலெல்லாம் தமது சொந்த வேலைகளைவிட்டு பாடசாலைக்குச் சென்று மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவார் உயர்ந்த நோக்கும் எளிய வாழ்க்கையுமுடையவர். பெற்றோர் மனம் அறிந்தும், மாணவர்களின் இயல்பறிந்தும் கடமைபுரிந்தவர். பாடசாலை நேரத்திலே மாணவர்களுக்குச் சலிக்காது சுறுசுறுப்புடன் கல்வி புகட்டுவதோடு நில்லாது மாணவர்களை பெற்றோர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யவேண்டுமெனவும் போதித்து ஊக்குவிப்பார்.

தவணைப் பரீட்சைகளில் பாடங்களுக்கு அதிகமான புள்ளியைப்பெறும் மாணவர்களுக்கு தமது சொந்தப் பொறுப்பிலே பரிசில்கள் வழங்கி மகிழ்வார். ஆங்கில, தமிழ் இருமொழிகளிலும் போதிப்பார். கணக்கை சுலபமான வழியில் எந்தக்களிமண் மூளைக்குள்ளும் புகுத்திவிடுவார்.

பல வழிகளிலும் முன்னோடியாக உழைத்த எங்கள் தலைமை ஆசிரியரை எங்கள் கிராமத்து ஆசிரியர்கள் பின்பற்றிக் கடமைபுரிய வேண்டும் 1970-ம் ஆண்டு எங்கள் தலைமை ஆசிரியருக்கு பாடசாலைக் கடமையிலிருந்து ஓய்வு கொடுத்தாலும் என்றைக்கும் எங்கள் கிராமம் அவரின்சேவையை எதிர் பார்த்தே நிற்கின்றது.

— க. மகேஸ்வரலிங்கம்

## 'ஒரேதடவையில் ஓய்வுபெறுவது துரதிஷ்டமானது'

உடும்பராய், புதன் 'இந்த நாட்டின் நல்ல சந்ததியை உருவாக்கும் பணி ஆசிரியர்களையே சேர்ந்தது. ஆசிரியர்களே ஒவ்வொரு...

## ஓய்வுபெறும் ஆசிரியர் திரு. ச. சிவகுரு

இவ்வாண்டு இறுதியுடன் தேவரையாளி இந்துக்கல்லூரியிலிருந்து இளைப்பாறும் திரு. ச. சிவகுரு ஆசிரியர் அவர்கள் அல்வாயைச் சேர்ந்தவர். ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்வகுப்பு வரை இக்கல்லூரியிலேயே கல்வி கற்று ஆசிரியப் பணியையும் ஆரம்பித்த இவர் முப்பத்தைந்து வருட சேவையின்பின் இளைப்பாறுகிறார்.

எளிமையான தோற்றம், கபடமற்ற உள்ளம், இவற்றால் மாணவர்களைக் கவர்ந்தவர். முப்பந்தைந்து வருட சேவைக்காலத்தில்என்றைக்குமே தேவையற்ற லீவு எடுக்காதவர். கடமையைக் கண்ணுங்கருத்துமாக நிறைவேற்றியவர்.

''சைவம்'' என்று எவரும் குறிப்பிடக்கூடிய வகையில் திரு. சிவகுரு மன, மெய், மொழிகளால் சரியை வழியில் ஒழுகியவர். ஓய்வுநேரத்தை வழிபாட்டில் செலவிடுபவர் நல்ல உண்மைத் தொண்டன் எத்துன்பத்திலும் வழிபாடுகடவுளுக்குச் செய்துவரும் கடமையில் வழுவாதவர்.

எண் கணிதம் பூஜ்ஜியம் என்று பூச்சாண்டி காட்டும் மாணவர்களின் புகலிடமாக அன்று தொட்டு இன்றுவரை அவர் விளங்குகிறார் என்றால், அவரது ஆசிரிய பணியின் சிறப்புக்கு வேறு உதாரணந் தேவையில்லை, எல்லாவற்றிலும் மேலாக நாட்டில் நடைபெறுகின்ற நடைபெறவிருக்கின்ற எந்தவொரு நற்கருமத்திற்கும் முட்டுக்கட்டையாக இராது. அவற்றின் வெற்றிக்காகவும், சிறப்புக்காகவும் பாடுபடும் ஒரு பெரும் பண்பாளன்.

அன்னார் சேவையிலின்றும் ஓய்வுபெற்றாலும் சமூகத்துக்குப் பெருந் தொண்...

## நெஞ்சம் மறப்பதில்லை

இந்த உலகத்திலே பிறப்பவர்களுள் ஒருசிலர்தான் மக்கள் உள்ளத்தில் அழியா இடம்பெற்றுச் சிறக்கிறார்கள். அத்தகைய ஒருசிலருள் கோப்பாய்ப் பெரியார் சோமசுந்தரமும் ஒருவர் என்றால் அது மிகையல்ல. இவர், சபாபதி நாவலரின் மருமகனும், சிவப்பிரகாச பண்டிதரின் புதல்வருமாவார்.

1895ம் ஆண்டு மார்கழி மாதம் சுழிபுர மண்ணில் பிறந்த இப்பெரியார், அவ்வூர் விக்ரோறியாக் கல்லூரியில் அறிஞர் சிவபாதசுந்தரனாரிடம் ஆங்கில, தமிழ் மொழிகளை ஆழமாகப் பயின்றார். அதன்பின் 21வது வயதில் மலேயா சென்ற இவர், அஞ்சல்நிலைய அதிபராக 32 ஆண்டுகள் கடமையாற்றினார். சுபாஸ்சந்திர போஸின் விடுதலை இயக்கத்திலும் சேர்ந்து பிரசார உத்தியோகத்தராக சேவையாற்றினார். ஒருமுறை இவ்வியக்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட ஒரு கூட்டத்தில் இலங்கையர் சார்பில் இவர் ஆற்றிய சொற்பொழிவு எல்லோரது பாராட்டையும் பெற்றதென்பர்.

1948ம் ஆண்டு ஓய்வு பெற்று இலங்கை திரும்பிய இவர், அழகிய கோப்பாய்க் கிராமத்தில் அமைதியான வாழ்வு வாழ ஆரம்பித்தார்.

இல்லத்திற்குச் செல்லும் எவரையும் இனிமையாக வரவேற்று ''இந்த வீட்டை உங்கள் சொந்த வீடாக எண்ணி எந்தநேரமும் வந்து போகவேண்டும்'' என்று அன்புக் கட்டளையிடும் இவர் இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் மலேயாவில் தாம் கண்ட பயங்கர நிகழ்ச்சிகள் பற்றியும் தாம் கேட்ட இந்திய வீரர் சுபாஸ் சந்திரபோஸின் வீரச்சொற்பொழிவுகள் பற்றியும் எடுத்துச் சொல்லி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவார்.

திரு. சோமசுந்தரம் இல்வாழ்க்கையிலே 'அடிசிற்கினியபடி சொல் தவறாத, அன்பு மனைவியைப் பெற்று, அவையத்து முந்தியிருக்கும் அருமை மைந்தனையும் பெற்றிருந்தார் அள்ள அள்ளக் குறையாத அறிவு செல்வம் எல்லாம் உற்றிருந்த இவர் அடக்கம் பொறை இன் சொல்லுடமை போன்ற அருங்குணங்களையும் பெற்றிருந்தார்.

எம்மூர் மக்களால் 'சிங்கப்பூர் சோமர்' என்று அழைக்கப்படும் இச்செல்வர் ஏனைய செல்வர்களைப் போல் தாமீட்டிய பணத்தை... மகனது மறைவால் இவரது குடும்பம் மட்டும் அழவில்லை. எமது கிராமத்திலுள்ள எல்லாக் குடும்பங்களுமே இன்று அழுது சொண்டிருக்கின்றன. அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகள் நடைபெறும் இன்று அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

— திருச்செந்தூர்

## உருவப்பட திரைநீக்க விழா

கொழும்பு செவ்வாய் வருகிற சனிக்கிழமை மாலை விவேகானந்தசபை மண்டபத்தில் சேர் அருணாசலம் மகாதேவாவின் உருவப்பட திரைநீக்க விழா நடைபெறவுள்ளது.

செனட் சபைத்தலைவர் திரு. ஏ. ரத்னாயக்கா திரைநீக்கம் செய்துவைப்பார். திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பொது நிவாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டார நாயக்கா, டாக்டர் எம். சி. எம். கலீல், திரு. டட்லி சேனநாயக்கா, திரு. ச. சோமசுந்தரம் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளார்கள்.

## அரிசி இறக்குமதி அதிகரிப்பு

கோட்டை, புதன் 1969-ம் ஆண்டிலும் பார்க்க 1970-ம் ஆண்டின் முதல் 9 மாதகாலப் பிரிவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு அதிகரித்துள்ளது. 1969-ம் ஆண்டின் மூற்பகுதியில் 174,358 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது 1970-ம் ஆண்டில் முற்பகுதியில் 278,058 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

இவ்வரிசி இறக்குமதி இவ்வாண்டு ஜுலை மாதத்திலிருந்து செப்டம்பர் வரை மேலும் அதிகரித்துள்ளது.

அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்புக்குக் காரணம்மக்கள் அரசாங்கம் திரும்பவும் 2-வது படி அரிசியை மக்களுக்கு வழங்க ஆரம்பித்ததால் ஆகும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கல்விச் சுற்றுலா

புங்குடுதீவு, செவ்வாய்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இசை.

344 மீ. அலை 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு6-15வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 திரைகானம், 7-15வயலின், 7-45நேயர்கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

கரமான செய்தி கிடைக்கும். நிம்மதியான தினம்.

மீனம்- பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம் முகமன் பேசுவோர் விஷயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்,

ஜெய்சங்கர் - பாரதி
நடித்த

காதல் பறவை

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்— லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

மாட்டுக்கார வேலன்

மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—கே.ஆர்.விஜயா
நடித்த

நெஞ்சிருக்கும் வரை

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
ஜெமினி-- சரோஜாதேவி
நடித்த

பணமா பாசமா

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya days 4 shows
Michael Caine
Noel Coward
in
"THE ITALIAN JOB"
(Panavision-color)

REGAL
Jaffna
Daily 4-45, 7&9-45p.m.
Poya days 4 shows
Janette Scott
in
BIKINI PARADISE
(adults only)


முறையில் பண்ணை அமைக்கவுள்ளனர். பூநகரியில் 200 ஏக்கர் நிலத்தை இப்பண்ணை அமைப்புக்காக அரசாங்கம் வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் பண்ணை வேலைகளை ஆரம்பிக்க விருப்பதாகவும் இங்கு கோழிகள் கால் நடைகள், பன்றிகள் ஆகியனவும் வளர்க்கப்படுமெனவும்முந்திரிகைச் செய்கைகளுக்குமுதலிடம்கொடுக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## 133புதியகூட்டுறவு சங்கங்கள்

சாய்ந்தமருது,புதன்

நிந்தாவூர்த்தொகுதியைச் சேர்ந்த அக்கரைப் பற்றுப் பகுதியில் புதிதாகத் தற்போது ஏறத்தாழ 133கூட்டுறவுச்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

தற்பொழுது இப்பகுதியில் ஒரு கூட்டுறவுச் சமாசம் மாத்திரமேயுள்ளது. இந்த கூட்டுறவுச்சமாசம் அக்கரைப்பற்று தென்பகுதி, அக்கரைப்பற்று மத்தியபகுதி சபையின்எல்லை, அக்கரைப்பற்று வடபகுதிஎன தனித்தனி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள்ளது.

உடும்பராய், புதன்

'இந்த நாட்டின் நல்ல சந்ததியை உருவாக்கும் பணி ஆசிரியர்களையே சேர்ந்தது. ஆசிரியர்களே ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாய் அமைபவர்கள். அரசாங்க ஊழியர்கள் ஐம்பத்தைந்து வயது பூர்த்தியானதும் ஒய்வுபெற வேண்டுமென்ற புதிய விதி ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும் படிப்படியே ஆசிரியர்களை ஒய்வுபெறச் செய்திருந்தால் பலருக்கும் ஆறுதலளிக்கக் கூடியதாயிருக்கும். அனுபவம் மிக்க பலதரப்பட்ட வயதுடைய ஆசிரியர்கள் ஒரே சந்தர்ப்பத்தில் ஒய்வுபெறுவது துரதிஷ்டவசமானதே'

இவ்வாறு கோப்பாய் வட்டாரப்பாடசாலைகளிலிருந்து ஒய்வுபெறவிருக்கும் தலைமையாசிரியர்களின் சேவையைப் பாராட்டி நடைபெற்ற பாராட்டுவிழாவிற் பேசிய கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் குறிப்பிட்டார்

அச்சுவேலி புனித திரேசா பாடசாலையில் நடைபெற்ற இவ்விழாவில் திருவாளர்கள் பி அந்தோனிப்பிள்ளை. க இ குமாரசாமி, ஆ சின்னத்தம்பி, அ சண்முகம் உட்படப் பலர் பேசினர்.

யாக இராது. அவற்றின் வெற்றிக்காகவும், சிறப்புக்காகவும் பாடுபடும் ஒரு பெரும் பண்பாளன்.

அன்னார் சேவையினின்றும் ஒய்வுபெற்றாலும் சமூகத்துக்குப் பெருந் தொண்டாற்றி இன்புற இறைவன் சகல நலன்களையும் அருளப் பிரார்த்திப்போம்.

ம க.

'சிலாபத்துறைக்கு

## ப. நோ கூ. ச. தேவை' கி ச. தலைவர் கோரிக்கை

முசலி,புதன்

சிலாபத்துறை என்னும் இடத்தில் பலநோக்குக் கூட்டுறவுத் தாய்ச்சங்கம் ஒன்றை அமைத்துத்தரும்படி முசலிதெற்கு கிராம சபை தலைவர் மன்னார்மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளரையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரையும் கேட்டுள்ளார்.

பிரயாணவசதி குன்றிய மேற்படி பகுதியில் 1971ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் புனரமைப்புத்திட்டம் உருவாகும்போது இக் கோரிக்கையைசெயற்படுத்த வேண்டுமென்றும் சபையின் சார்பில் கேட்டுள்ளார்.

களையும் பெற்றிருந்தார்.

எம்மூர் மக்களால் 'சிங்கப்பூர் சோமர்' என்று அழைக்கப்படும் இச்செல்வர் ஏனைய செல்வர்களைப் போல் தாமீட்டிய பணத்தை எந்த வங்கியிலும் போட்டு சேமித்ததில்லை, எதிர் மாறாக ஏழைகள் வயிற்றுப் பசிக்குத் தம் செல்வத்தைச் செலவு செய்தார். இதனால் தான் தம் பணத்தை வங்கிகளில் போட்ட செல்வர்களெல்லாம் அழுதுகொண்டு இறக்க கையில் இவர் சிரித்துக்கொண்டு மரித்தார் போலும். 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25-ந் திகதி இரவு 10 மணியளவில்'எல்லாம் முடிந்தது' என்று இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி இவ்வுலகை அவர் நீத்தார். இத்தலை

## ஒய்வுபெற்றார்

யாழ்ப்பாணம், வியா.

கட்டுடை சைவ வித்தியாசாலையில் தலைமையாசிரியராகவும், அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியச் சங்கத் தலைவராகவுமிருந்து ஒய்வுபெற்ற திரு. சண்முகதாசனுக்கு அவரது சேவையைப் பாராட்டுமுகமாக இன்று ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சேவைநலம் பாராட்டுவிழா ஒன்று நடாத்தப்படுகின்றது

அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கல்விச் சுற்றுலா

புங்குடுதீவு, செவ்வாய்

புங்குடுதீவு மகா வித்தியாலய சிரேஷ்ட வகுப்பு விஞ்ஞான மாணவர்களுக்கு விஞ்ஞானக் கழகம் ஒரு கல்விச்சுற்றுலா ஒழுங்கு செய்தது. உபஅதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் கடந்த 7-ம் திகதி பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை பலாலி விமான நிலையம், தோலகட்டி ஆகிய இடங்களுக்கு மாணவர் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

## மண்டூர் - அம்பாறை இ போ ச சேவை

சாய்ந்தமருது,புதன்

மண்டூர்- அம்பாறைக்கு இ. போ. ச. பஸ்சேவை பொறியியலாளர் அறிக்கை கிடைத்தபின்னர் ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதி பிரயாணிகள் சங்கம் செய்துகொண்ட முறையீட்டின் பின்னர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்

யாழ். வெலிங்டன்
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ

முத்துராமன்
அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர்
மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்



கண்ணன் என் காதலன்

தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

10.12.70

யாழ். வின்ஸர் வெண்திரையில்
இன்று 10-12-70 முதல் ஆரம்பம் தினசரி 4 காட்சிகள்



★ ஏ. வி. எம். ராஜன்
★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி ★ நிர்மலா
★ நாகேஷ் ★ கண்ணையா
★ எம். ஆர். ஆர். வாசு
★ புஸ்பமாலா
நடித்த

ஏன் ?



டைரக்ஷன்:
ராமண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூலிப்படை தாக்குதலுக்குள்ளான

# கினிக்கு போர்த்துக்கல் நஷ்டஈடு வழங்க வேண்டும்

# பாதுகாப்புச்சபையில் தீர்மானம்

### ஐ. நா. குழுவின் அறிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது

நியுயோர்க், டிச. 9

மேற்கு ஆபிரிக்க நாடான கினி மீது போர்ச்சுக்கல் கூலிப்படைகளைக் கொண்டு தாக்குதல் நடாத்தியிருப்பதாக ஐ. நா. குழுவொன்று தாக்குதல் செய்த அறிக்கையை ஐ. நா. பாதுகாப்பு சபை ஏற்றுக் கொண்டது.

கினிநாட்டின் மீதுபோர்த்துக்கல் கூலிப்படைகள் தாக்குதல் நடாத்தியதாகக் கிடைத்த செய்திகளைத் தொடர்ந்து ஐ. நா. சபை அங்கம் வகிக்கும் 5 நாடுகளின் தலைமைப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று நிலைமையை நேரில் அறிந்துவருவதற்காக அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தக்குழு அங்கு சென்று ஆய்வுகள் நடத்திவிட்டு தாக்கல்செய்த அறிக்கையில் கினிமீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு போர்த்துக்கல்தான் ஆதரவு அளித்திருக்கின்றதுஎன்று குற்றஞ் சாட்டியிருந்தது. இந்த அறிக்கையை இப்பொழுது பாதுகாப்புச்சபை ஏற்றுக் கொண்டு விட்டது. கினிமீது தாக்குதல் நடத்தியமைக்காக போர்த்துக்கலை கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் பாதுகாப்புச் சபையில் நிறைவேறியது.

கினிநாட்டிற்கு போர்த்துக்கல் நஷ்டஈடுகள் வழங்க வேண்டும் என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 11 நாடுகள் வாக்களித்தன. எதிர்த்து எந்த நாடும் வாக்களிக்கவில்லை. ஆனல் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஸ்பெயின் ஆகிய நான்கு நாடுகளும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இத்தீர்மானத்தின் சில அம்சங்கள் பாரதூரமாக விருப்பதாக இந்த நாடுகள் கூறியுள்ளன.

கினிமீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லையென்று போர்த்துக்கல் பலதடவைகளிலும்மறுத்து வந்துள்ளது.

---

பேர்லினில்

### கத்தோலிக்க மகாநாடு

பேர்லின், டிச. 9

ஐரோப்பிய கத்தோலிக்க கிறிஸ்துவ மகாநாடு இங்கு நடந்தேறியது.

ஐரோப்பிய நாடுகளினிபந்தோபஸ்து ஒத்துழைப்பு பற்றிய அகில ஐரேப்பிய மகாநாட்டை கூட்டுவதை மகாநாடு வரவேற்றுள்ளத

இந்தோ-சீனுவிலும், இஸ்ரேலிலும். லத்தீன் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும் ஆதிக்கவாதிகள் நடத்தும் அட்டூழியங்களையும் ஆக்கிரமிப்பையும் மகாநாடு வன்மையாக கண்டித்துள்ளது

மேற்கு ஜெர்மனியிலுள்ள சமாதான சக்திகள் தீவிர வலதுசாரிசக்திகளைஎதிர்த்த போராட்டத்தை தளர்வடையவிடக் கூடாது என்று மகாநாடு எச்சரித்துள்ளது

— —

### 'கண்டவற்றை எல்லாம் எழுதாதீர்'

உடுப்பிட்டி, புதன்

'இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே இலக்கியத்துறையில் ஆர்வமும் மிகுந்த ஈடுபாடும் வளர்ந்தோங்கி வருவதைக் காண முடிகின்றது. இதேவேளையில் எவற்றையும் படிக்க வேண்டும். எவற்றையும் எழுத வேண்டுமென்ற தெளிவையும் மாணவர்கள் திட்டவட்டமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். இளம் சந்ததியினரைத் தீய வழிகளில் இட்டுச் செல்லக்கூடிய ஆபாசமான விரசமான, மலிவான எழுத்துக்களைப் படிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்

---

# சுவிஸ் தூதுவர் சுகமாக இருக்கிறர்

றி-ஓ-டிஜெனரோ, டிச. 9

தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்ட சுவிஸ் நாட்டுத் தூதுவர் சுகமாக இருப்பதாக தகவல் அனுப்பியிருக்கிறர்.

பொலிசாருக்கு கிடைத்துள்ள கடிதமொன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்துடன் இருந்த இன்னெரு கடிதத்தில் தீவிரவாதிகள் தமது நிபந்தனைகளைத் தெரிவித்துள்ளனர் தூதுவர் றியோவானி புச்சரை விடுதலை செய்வதற்கு சிறை வைக்கப்பட்டுள்ளவர்களின் சகாக்கள் விடுதலைசெய்யப்படவேண்டும் என்றும், கொரில்லா நிலைகளைத்தேடும் முயற்சியைப் பொலிசார் கைவிடவேண்டும் என்றும் அவர்கள் நிபந்தனை விடுத்துள்ளனர்.

---

# மூன்றுவகை பாடசாலைகள்

### 1971 முதல் நடைமுறைக்கு வரும்

யாழ்ப்பாணம், வியா

அடுத்த ஆண்டு முதல் அமுலுக்கு வரவிருக்கும் பாடசாலை புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மூன்று வகையான பாடசாலைகள் இயங்கும் ஆரம்பம் முதல் 8-ம் வகுப்புவரை உள்ள வகுப்புக்களைக் கொண்ட வித்தியாலயங்கள் எனவும் ஒன்பதாம் வகுப்பு தொடக்கம் பன்னிரண்டாம் வகுப்புவரை இயங்கும் பாடசாலைகள் மகாவித்தியாலயங்கள் எனவும் இயங்கும். இவை தவிர்ந்த மூன்றும் வகையான பாடசாலைகள் இயங்குவதற்கும் விசேட அனுமதி கல்விஅமைச்சினுல் வழங்கப்பட்டுள்ளது. இந்தவகையில் ஆரம்பம் முதல் பத்தாம் வகுப்புவரை உள்ள பாடசாலைகள் அடங்கும். சில பின்தங்கிய இடங்களுக்கு உதவிஅளிப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கீழ்க்காணும் பாடசாலைகள் இந்த மூன்றும் வகையில் இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், கப்புது இதக பாடசாலை, கோண்டாவில் இராமகிருஷ்ண மிஷன் த[illegible] பாடசாலை, கோண்டாவில் இதக பாடசாலை, ந[illegible]லார் ஸ்ரேசன்

---

புதிய கப்பல் கட்டணம்

### மாதம் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா மேலதிக நஷ்டம்

கோட்டை, புதன்

லண்டன் துறைமுகத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கு வரும் கப்பல்களுக்குப் புதிய மேலதிக கப்பல் கட்டணம் அறவிடப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் பலத்த ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

டிசம்பர் முதலாந் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ள 25சதவீத மேலதிகக் கப்பல் கட்டணத்தினுல் மாதந் தோறும் இலங்கைக்குச் சுமார் 5 லட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

— —

### அனலைதீவு நல்லிணக்கச்சபை

வேலணை, புதன்

இந்தநிதியாண்டில் அனலைதீவுக்கும், நயினுதீவுக்கும் நல்லிணக்கச்சபைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக உதவி நிதி அமைச்சர் திரு. இரத்தினசிறி விக்கிரமநாயக்கா அறி

---

# சோவியத் நாட்டில் குடியிருப்பு வசதி

மாஸ்சோ, டிச. 9

நடைமுறை ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1966-1970) சுமார் 550 லட்சம் சோவியத் பிரஜைகள் தமது குடியிருப்பு நிலையங்களை விருத்தி செய்துள்ளனர். நகரங்களிலுள்ள வீடுகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை முன்னேற்றகரமான தொழில் முறைகளின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்டவையாகும்.

நிர்மாணத்திற்கான ஐந்தாண்டுத் திட்டத்தின் அமுலாக்கம் பற்றிய கேள்விகளுக்கு சோவியத் சிவில் எஞ்[illegible] சோவியத் யூனியனில் சேரிகள் எதுவும் கிடையாது என்றுர் பொமின்.

— —

### சோவியத்(டாஸ்) தூதுக்குழு

கோட்டை, புதன்

இலங்கை கம்யூனிஸ்ட், முற்போக்கு வாலிபர் சம்மேளனத்தின் அழைப்பை ஏற்று சோவியத் யூனியனிலிருந்து மூன்று பிரதிநிதிகளைக் கொண்ட தூதுக்குழு ஒன்று இரண்டுவார விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது. இலங்கை

---

மேற்காஸிய நெருக்கடி

# அமைதிப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாவதில் நிக்ஸன் அக்கறை

நியுயோர்க், டிச. 9

மேற்காசிய நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கும் வகையில் மீண்டும் டாக்டர் ஜாரிங் தலைமையில் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்க செய்வதற்குஅதிபர் நிக்ஸன் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறர்.

மேற்காசியாவில் போர் ஓய்வு நிலவிய போதிலும் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள இஸ்ரேல் மறுத்துவருகின்றது. அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் சில நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டாகவேண்டும் என்று இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு. அபா இபான் தெரிவித்திருக்கிறர்.

போர் ஓய்வு காலத்தில் சோவியத்நிபுணர்களின் ஒத்துழைப்புடன் ஏராளமான ஏவாயுதத்தளங்களை எகிப்தியர் நிறுவிக்கொண்டதாகவும் இவைகளை அப்புறப்படுத்தினலன்றி டாக்டர் ஜாரிங் தலைமையிலான அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியாதென்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது

என்றுலும் மீண்டும் இப்பேச்சுக்களை ஆரம்பிக்கச் செய்வதில் அதிபர் நிக்ஸன் அதிக நாட்டம் கொண்டிருக்கிறர். மேற்காசிய அமைதிப்பேச்சுக்கள்சம்பந்தமாக அதிபர் நிக்ஸன் தம்மைச் சந்தித்த ஜோர்டான் மன்னர் ஹுசேனுடன் நேற்று ஆலோசனைகள் நடத்தினர். மன்னர் ஹுசேன் அரபுத் தலைவர்கள் பலருடன் ஆலோசனைகளில் கலந்தபின்னர் இப்பொழுது அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருக்கிறர். அதிபர் நிக்ஸனுடனும் இதர தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடத்திவிட்டு மன்னர் ஹுசேன் அமெரிக்காவைவிட்டுப்புறப்படவிருக்கும் தினத்திற்கு மறுநாள் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு மோஷே தயான் வாஷிங்டனுக்கு விஜயம் செய்யவிருக்கிறர். இஸ்ரேல் அரசின் சார்பில் அமெரிக்கத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தும் முழு உரிமையையும் இஸ்ரேல் அரசு அவருக்கு வழங்கியிருக்கின்றது. எகிப்தியருக்கு சோவியத் யூனியன் பெருவாரியான ஆயுதங்களைக் கொடுத்துதவியதாகக் கூறி அதற்கு ஈடு செய்யும் வகையில் தங்களுக்கு ஆயுத உதவிகளை வழங்கும்படி திரு. தயான், திரு. நிக்ஸனைக் கேட்பார் என்று கருதப்படுகின்றது. அதேசமயம் இஸ்ரேலை மீண்டும் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளச் செய்வதில் நிக்ஸன் முயல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

---

மைலாய் படுகொலை

# ஓடிய குழந்தையைப் பிடித்து கிடங்கில் தள்ளி சுட்டாராம்

### யு.எஸ். அதிகாரி மீதான வழக்கு தொடர்ந்து விசாரணை

ஃபோர்ட்—பென்னிங், டிச. 9

லெப்டினன்ட் வில்லியம் கால்வி தென் வியட்னும் மைலாய் கிராமத்தில் 102 கிராமவாசிகளை படிப்படியாகக் கொன்று தள்ளியதைக் கண்டதாக பிராஸிகூஷன் தரப்பு சாட்சியொருவர் கூறினுர். இவரது சாட்சியம் ராணுவ நீதிமன்றத்தில் திகைப்பை ஏற்படுத்தியது.

1968-ம் ஆண்டு தென் வியட்னுமில் மைலாய் கிராமத்தில் 102 கிராமவாசிகளைக் கொன்று தள்ளியதாக லெப்டினன்ட் கால்வியும் அவரது சகாக்களும் ராணுவ நீதிமன்றத்தினுல் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். சிறுசிறு கூட்டங்களாக கிராமவாசிகளை லெப்டினன்ட்கால்விஒருமுறைப்படி சுட்டுத்தள்ளுவதைப் பார்த்ததாக 24 வயதான காப்பரல் தோமஸ் டேர்

இந்தச் சாட்சியம் தங்களுக்குத் திகைப்பை ஏற்படுத்தியிருப்பதாக எதிரியின் வழக்கறிஞர் கூறினுர். சாட்சி முன்னர் கோர்ட்டில் பேச மறுத்துவிட்டார் என்றும் இந்த சாட்சியைக் கூப்பிடப்படும் என்று தமக்குத் தெரிந்திருக்கவில்லையென்றும் அவர் சொன்னுர்.

முன்னதாக கால்வியின் அணியில் வானெலி இயக்குபவராக இருந்த சார்ல்ஸ் ஸ்லெஜ் சாட்சியமளிக்கையில், லெப்டினன்ட் கால்வி ஒரு சமயக் குருவையும், குழந்தையொன்றையும் கொலை செய்வதற்கு ஒதுக்கி வைத்ததைப் பார்த்ததாகக் கூறினுர்.

23 வயதான இந்தச் சாட்சி ஒரு நீக்ரோவர். சுமார் 30 அல்லது 40 பேர் இருந்த கிடங்கொன்றுக்குள் கால்வி தமது தானியங்கி துப்பாக்கியால் சுடுவதைக் இரண்டு முதல் 5 வயது வரையுள்ள ஒரு குழந்தையையும் கால்வி சுடுவதைத் தாம் பார்த்ததாகவும் அவர் சொன்னுர்.

"அவர் (கால்வி) ரைபிளின் அடிப்பாகத்தினுல் மதகுருவின் வாயில் அடித்தார். அவரைக் கொன்றுர், தலையில் சுட்டு பிய்த்து எறிந்தார்" என்று சாட்சி சொன்னுர்.

ஒரு குழந்தைகிராமத்தின் மத்திய பகுதிக்கு ஓடுவதாக ஒரு சிப்பாய் கத்தினுர். கால்வி உடனே அக்குழந்தையின் கையைப் பிடித்து இழுத்து கிடங்குக்குள் எறிந்து சுட்டார்" என்றுர் சாட்சி.

விசாரணை தொடர்கின்றது.

......

### வேலணையில் ஜுரம் பரவுகிறது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தொழில் முறைகளின் அடிப் படையில் நிர்மாணிக்கப் பட்டவையாகும்.

நிர்மாணத்திற்கான ஐந் தாண்டுத் திட்டத்தின் அமு லாக்கம் பற்றிய கேள்விக ளுக்கு சோவியத் சிவில் எஞ் ஜினியரிங், கட்டடக் கலைக் கான அரசாங்க கமிட்டியின் தலைவர் கெனடி போமின் பதிலளித்தார் பத்திரிகை யாளர்கள் கூட்டத்தில் சோவியத், அயல் நாட்டுப் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

வீட்டு நிர்மாண அளவில் சோவியத் யூனியன் உலகில் முதல்ஸ்தானம் வகிக்கிறது. சோவியத் நகர நிர்மாணம் நகரங்களை ஒத்திசைவான திட்டத்தின் அடிப் படை யில் நிர்மாணிப்பதற்கான நல்ல உதாரணமாகும். பாட சாலைகள், பாலர்வகுப்புகள், கடைகள், ஆஸ்பத்திரிகள், விளையாட்டு திடல்கள் ஆகி யன நிர்மாணிக்கப் படுகின் றன. குடியிருப்பு இல்லங்களை அடுத்து தோப்புகளும், சோலைகளும் அமைக்கப்ப கின்றன.

சோஷலிஸப் பொது உறவுகள் காரணமாக

## சோவியத்-பாக் வர்த்தக உடன்படிக்கை

ராவல்பிண்டி, டிச. 9

1971-1975க்கான வர்த் தக ஒப்பந்தமொன்றை சோவியத் யூனியனும், பாகிஸ்தானும் இங்கு கைச் சாத்திட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் சோவியத்- பாகிஸ்தான் வர்த்தகம் நான்கு மடங்கு பெருகியது இவ்வொப்பந் தத்தின் படி பாகிஸ்தான் சோவியத் யூனியனிடமிரு ந்து பாதை நிர்மாணிக்கும் யந்திரங்கள். மின்சார பளு தூக்கும் யந்திரங்கள், யந் திர கருவிகள், வைத்திய சாதனங்கள் உட்பட பலரக யந்திரங்களை கொள்வனவு செய்யும்.

சோவியத்யூனியன் பாகிஸ் தானிடமிருந்து சணல், ஜவுளி, பின்னல் உடை முத லியவற்றை வாங்கும். இதுவே இரு நாடுகளும் நீண்டகால அடிப்படையில் கைச்சாத்திடும் முதல் வர்த் தக ஒப்பந்தமாகும்.

## திருத்தம்

2-12-70ல் வெளியாகிய செய்தியில் வேலணை கிரா மச் சபையின் 71ம் ஆண்டுக் கான வரவு செலவு திட்ட அறிக்கையை திரு பு. நவ சிவாயம் அனுசரித்ததாக இருப்பது தவறு. திரு பொ. நமசிவாயம் என இருக்க வேண்டும்.

மேளனத்தின் அழைப்பை ஏற்று சோவியத் யூனியனி லிருந்து மூன்று பிரதிநிதி களைக் கொண்ட தூதுக்குழு ஒன்று இரண்டுவார விஜ யத்தை மேற்கொண்டு இல ங்கை வந்துள்ளது. இலங்கை யில் தங்கியிருக்கும்போது தூதுக்குழுவினர் ரத்னபுரி, மாத்தறை, தங்கல்ல, அம் பாந்தோட்டை, நுவரெ லியா, கண்டி, யாழ்ப்பானம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்வார்கள். லங்கா சம சமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற் றின் வாலிபர் சங்கப் பிரதி நிதிகளையும் இவர்கள் சந் திப்பர்.

## சோவியத் பிரதிநிதி கண்டனம்

நியூயோர்க், டிச. 9

போர்த்துக்கல்லின் நீசச் செயல் கையும் மெய்யுமாக அகப்பட்டுவிட்டது. கினி மீது கட்டவிழ்க்கப்பட்ட ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு கலோனியல் அமைப்புகள் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இவ்வாறு பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சோவி யத் பிரதிநிதி யாகோன் மாலிக் அண்மையில் கூறி னார்.

ஆசிய ஆபிரிக்க நாடுகள் சமர்ப்பித்திருந்த பிரே ரணையை ஆதரித்து பேசிய சோவியத் பிரதிநிதி போர்த் துக்கல் சந்தேகத்துக்கிட மின்றி கண்டிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

போர்த்துக்கல் மீது ராஜ தந்திர, பொருளாதார பகிஷ்கரிப்பு செய்வதுடன் தபால் தந்தி மற்றும் தொடர்புகளையும் உலக நாடுகள் துண்டித்துக்கொள் ளும் வகையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டு மென்று வலியுறுத்தினார்.

## இ. போ. ச. ஊழியருக்கு போனஸ்?

கிளிநொச்சி, புதன்

இ. போ. ச. தலைமைப் பீடம் பிராந்திய கணக்குப் பிரிவினரிடம் இ. போ. ச. ஊழியர்களுக்கு முன்பண மாக வழங்கவேண்டிய கண க்குவிபரத்தைக் கேட்டுள்ள தால் நத்தாருக்கு முதல்வார த்தில் இ. போ. ச. ஊழியர் களுக்கு போனஸ் வழங்கப் படலாம் எனத் தெரிய வரு கிறது.

றுக் கொள்ள வேண்டும். இளம் சந்ததியினரைத் தீய வழிகளில் இட்டுச் செல்லக் கூடிய ஆபாசமான விரச மான, மலிவான எழுத்துக் களைப் படிப்பதைத் தவிர்த் துக் கொள்ள வேண்டும் எதை எழுத வேண்டும்? எப் படி எழுத வேண்டும்? ஏன் எழுத வேண்டும்? என்ற வினாக்களுக்குத் தெளிவான விடையை நெஞ்சில் நிறுத் தியே எழுத ஆரம்பிக்க வேண்டும்.'

இவ்வாறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி யின் உயர்வகுப்பு மாணவர் களால் வெளியிடப்பட்ட 'இடிமுழக்கம்' என்னும் கலை இலக்கியச் சஞ்சி கையை வெளியிட்டு வைத் துப் பேசும்பொழுது எழுத் தாளர் 'தெணியான்' குறிப் பிட்டார்.

மேற்படி கல்லூரி மண்ட பத்தில் அதிபர் திரு. செல் லத்துரை தலைமையில் நடை பெற்ற 'இடிமுழக்கம்' கலை இலக்கிய சஞ்சிகை வெளி யீட்டு விழாவில் 'தெணி யான்' மேலும் பேசுகையில் 'இலக்கியம் என்றால் அது பழைய செய்யுள்கள்தான் அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் ஆசிரியர் கள் என்ற தரகர்களின் அனு சரணை வேண்டும் என்ற நிலைமாறி மாணவர்களே இலக்கியத்தோடு தொடர்பு கொள்ளும் நிலை இன்று உருவாகிவிட்டது' என்றார்.

## "ஏழைகளை புறக்கணித்தது"

மாத்தளை, புதன்

'முன்னைய அரசாங்கத் தின் ஆட்சிக்காலத்தில் சகல உதவிகளும் செல்வந்தர் களுக்கே கிடைத்தன இதனால் வறியவர்கள் கைவிடப்பட் டார்கள் அரசாங்கம் முதலா ளிவர்க்கத்தினர் இது வரை காலமும் அனுபவித்து வந்த சலுகைகளை நீக்கத் தயங்காது

விஜயபாலமகாவித்தியால யத்தில் தனக்களிக்கப்பட்ட வரவேற்பின் போது பதுளை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு நிச்சாட் உடுகம மேற் கண்டவாறு கூறினார்,

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!- அரசாங்கம் முதலாளிவர்க கத்தினரிடம் இருந்து அவர் கள் அனுபவித்துவந்த செல் வத்தைத் தேசிய நலனுக் குப்பான் படுத்தி தேசிய வருமானத்தை பொதுமக்க ளுக்கு நியாயமான முறை யில் வழங்கவுள்ளது மக்கள் அரசாங்கம் நாட்டின் பிரச் னைகளை தீர்ப்பதற்கு பெரு முயற்சி செய்து வருகிறது

வித்தியாலயம், கப்புது இ த க பாடசாலை, கோண் டாவில் இராமகிருஷ்ண மிஷன் த க பாடசாலை, கோண்டாவில் இ த க பாட சாலை, நல்லூர் ஸ்ரேசன் சி சி த க பாடசாலை, அச்சு வேலி புனிததிரேஸா த பெ பாடசாலை, புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியா லயம், அச்சுவேலி சரஸ் வதி வித்தியாலயம், தர்ம புரம் அ த க இல. 2 பாட சாலை இணுவில் சை பி வித்தியாசாலை, இணுவில் சைவமகாஜன பாடசாலை, ஏழாலை குப்பிளான் விக்கி னேஸ்வர வித்தியாசாலை, தெல்லிப்பளை மெய் கண்டான் வித்தியாசாலை, கீரிமலை நகுலேஸ்வரவித்தி யாசாலை, கொழும்புத்துறை றோ க அ பாடசாலை, புனித சார்ல்ஸ் றோ க க பாடசாலை தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை, கொடிகா மம் அ த க பாடசாலை, கைதடி விக்கினேஸ்வர வித் தியாசாலை, கைதடி முத்துக் குமாரசாமி வித்தியாசாலை, வேலணை கிழக்கு அ த க பாடசாலை, வல்வெட்டி இ த க பாடசாலை, கரண வாய் பொன்னம்பல வித் தியசாலை. பெரியபுலம் மெ மி த பாடசாலை, கொக்குவில் இராமகிருஷ்ண மிஷன் த க பாடசாலை மானிப்பாய் புனித அன்னம் மா றோ க த க பாடசாலை ஆனைக்கோட்டைபாலசுப்பிர மணியவித்தியாசாலைபாஷை யூர் புனித அந்தோனியார் றோ க த க பாடசாலை, புனித மேரி றோ க த க பாட சாலை, நாவாந்துறை றோ க த க பாடசாலை புனிதஜேம்ஸ் றோ க த க பாடாசலை, கொட்டடி நமசி வாய வித்தியாசாலை. பொலி கண்டி இ த க பாடசாலை சின்னகலட்டி ஞானோதயவித் தியாசாலை, பொன்னாலைசேர் கனகசபை வித்தியாசாலை கொல்லங்கலட்டி இ த க பாடசாலை, மீசாலை விக்கி னேஸ்வர வித்தியாசாலை, கோப்பாய் சரவணபவா னந்தவித்தியாசாலை, உரும்ப ராய் றோ க த க பாடசாலை ஆவரங்கால் மெ மி த க பாடசாலை. காரைநகர் மக ளிர் வித்தியாலயம். ஆனையி றவு தமிழ் சிங்கள கலவன் பாடசாலை.

கடந்த அரசாங்கம் திறை சேரியை வெறுமையாக விட்டுச் சென்றதால் இலகு வில் பிரச்னைக்ளுக்குத் தீர்வு ளது. காண்பதுகஷ்டமாகவு ள்ளனினும் மக்களின் சகல பிரச்னைகளுக்கும் விரை வில் தீர்வு காணப்படும்.

தீவுக்கும், நயினாதீவுக்கும் நல்லிணக்கச்சபைகளை நிறுவு வதற்கு நடவடிக்கை எடு த்து வருவதாக உதவி நிதி அமைச்சர் திரு. இரத்தின சிறி விக்கிரமநாயக்கா அறி வித்துள்ளார்.

தீவுப்பகுதி எம். பி. பண் டிதர் கா. பொ. இரத்தின த்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் இதைத் தெரிவித்துள்ளார்

......

## சஹஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா.

கடைசிச் சோமவார நாளாகிய வருகிற திங்கட் கிழமை நல்லூர்ச் சிவன் கோவிலில் சஹஸ்ர சங்கா பிஷேகம் நடைபெறும்.

அன்று சிவபெருமானுக்கு சஹஸ்ர சங்காபிஷேகமும், ஸ்ரீ கமலாம்பிகா தேவிக்கு அஷ்டோத்திரசத சங்காபி ஷேகமும், பஞ்சமுகார்ச்சனை யும், மாலை, சுவாமிஅம்பாள் உற்சவக் காட்சியும் நடை பெறவுள்ளன.

......

## நவீன விவசாய விஸ்தரிப்பு நிலையம்

சாய்ந்தமருது, வியாழன்

அட்டாளைச்சேனையில மிக விரைவில் நவீன விவசாய விஸ்தரிப்பு நிலையம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது

அட்டாளைச்சேனை ஜும் ஆப் பள்ளிவாசல் நம்பிக்கை யாளர் சபை, மேற்படி பள் ளிக்குச் சொந்தமான காணி யின் சிறு பகுதியை நவீன விவசாய விஸ்தரிப்பு நிலையம் அமைப்பதற்காக அம்பாறை மாவட்ட விவசாய அதிகாரி களிடம் வழங்கியுள்ளது.

......

## கிராமவிருத்தி ஆலோசனைக் கூட்டம்

முசலி, புதன்

பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தியைப் பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று அச்சுவேலி கிராமமுன்னேற் றப் பயிற்சிப் பாடசாலையில் இம் மாதம் 22ந் திகதி நடைபெறுமென்றும் எல் லாக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், கிராம அபிவிருத்திப் பயிற் சிப் பொறுப்பதிகாரிகளும் பங்குபற்றவேண்டும்என்றும் குடிசைக் கைத்தொழில் இலாகா அதிபர் அறிவித் துள்ளார்.

ளர். சிறுசிறு கூட்டங்களாக கிராமவாசிகளை லெப்டி னன்ட்கால்விஒருமுறைப்படி சுட்டுத்தள்ளுவதைப் பார்த்ததாக 24 வயதான காப்பரல் தோமஸ் டேர் னர் என்ற அந்தச் சாட்சி கூறினார். இவர் கால்வியின் ராணுவ அணியில் இருந்த வர் 90 நிமிடங்கள் இதைக் கால்வி செய்து முடித்ததாக சாட்சி சொன்னார். துப் பாக்கிப் பிரயோகம் முடிந்த பின்னர் ஒரு கிடங்குக்குள் சுமார் 90 அல்லது 100 சட லங்கள் கிடப்பதைத் தாம் கண்டதாக சாட்சி கூறினார்.

23 வயதான இந்தச் சாட்சி ஒரு நீக்ரோவர். சுமார் 30 அல்லது 40 பேர் இருந்த கிடங்கொன்றுக்குள் கால்வி தமது தானியங்கி துப்பாக்கியால் சுடுவதைக் கண்டதாகவும் சொன்னார். கிராமவாசிகளைக் கொல்ல வேண்டும் என்று கால்வி கட்டளையிட்டதுடன் அதி னைத் தாமே பெரும்பாலும் செய்தார் என்றும் சாட்சி சொன்னார்.

சாட்சி தாம் எவரையும் கொல்லவில்லையென்றார். சுமார் 40 அல்லது 50 வய தான மதகுருவையும்

றது.

......

## வேலணையில் ஜுரம் பரவுகிறது

வேலணை, புதன்

வேலணைப் பகுதியில் ஒரு வகை 'ஜுரம்' பரவிவருகி றதாம். சில தினங்களின் முன் பெய்த மழையைத் தொடர்ந்து இப்பகுதியைச் சேர்ந்த பலர் வேலணை ஆஸ் பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுவோர் தொகை நாளா ந்தம் அதிகரித்து வருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு; உன்னுடையதை எடுத்துக்கொள்கிறவனிடத்தில் அதைத் திருப்பிக் கேளாதே. மற்றவர்கள் உங்களுக்கு எப்படி செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

— இயேசுநாதர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 25-ந் திகதி (10-12-70)


## குடியிருப்புப் பிரச்னை

நாட்டில் நிலவும் குடியிருப்புப் பிரச்னை பற்றியும் அதைத் தீர்ப்பதற்குத் தாம் உத்தேசித்துள்ள சில திட்டங்கள் பற்றியும் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் ஆட்சி மன்றத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெரிவித்திருக்கிறார். உலகில் எந்த நாடும் வீடில்லாப்பிரச்னையை முற்றாகத் தீர்த்துவிடவில்லை. நமது நாட்டிலும் இப்பிரச்னையை முழுவதுமாகத் தீர்ப்பதென்பது சுலபமல்ல.

வீடில்லாப் பிரச்னை நகர்ப்புறங்களில் மட்டுமல்ல கிராமப்புறங்களிலுமிருக்கிறது. நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில்தான் வீடில்லாத் தட்டுப்பாடு அதிகம் என்பது அமைச்சர் கெனமன் தெரிவித்த விபரங்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.

(1) சொந்தத் தேவைக்காகவும் தங்கள் பிள்ளைகளுக்காகவும் ஒருவர் வீடு கட்டுவாரானால் அவருக்கு கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். (2) அடுத்த ஆண்டில் சுமார் ஐயாயிரம் குறைந்த வாடகை வீடுகளை வீடமைப்பு அமைச்சு கட்டுவதற்கு முடிவுசெய்திருக்கிறது. இவ் வீடுகளுக்கு 3500 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரை செலவுசெய்யப்படும். (3) சேரி வாழ் மக்களில் பெருந்தொகையானோருக்கு புதிய வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (4) கிராமப்புறங்களிலிருந்து வீடு கட்ட கடன்கோரும் விண்ணப்பங்களுக்கு முதலிடம் அளிக்கப்படும், 1200 சதுர அடிக்குக் குறைந்த விஸ்தாரமுள்ள வீடுகளைக் கட்ட விண்ணப்பிப்பவர்களுக்கு 25,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படும். (5) மாதம் 1500 ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுவோருக்குக் கடன் வழங்கப்பட

வீட்டுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் தெரிவித்த விபரங்களில் சிலவே மேலேயுள்ளவை.

நாடு விடுதலையடைந்த பின் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் வீட்டுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு என்னென்ன திட்டங்கள் எல்லாம் தீட்டின. வெளிநாடுகள் பலவுக்கும் நிபுணர் குழுக்களும் சென்றுவந்தன. அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. ஆனால் குடியிருப்புப் பிரச்னை தீர்ந்தபாடாகவில்லை. வீடமைப்புக்கெனக் கடன் வழங்கப்பட்டது. அரசாங்க சேவையிலுள்ளவர்கள், நிறைந்தவருமானமுள்ளவர்கள், சொந்த நிலபுலமுள்ளவர்கள்தான் இந்தக் கடனுதவியைப் பெறக்கூடியதாயிருந்தது.

கடன்வசதி நல்லதுதான் என்றாலும் கடன் தொகையையும் மாதாமாதம் வட்டியையும் செலுத்துவதிலேயே கடன்பெறுபவர் நிம்மதியை இழந்துவிடுவர்.

வீடமைப்புக்கென கடன் வழங்குவதைவிட அரசாங்கமே வீடுகளைக் கட்டிக்கொடுத்து அதன் பெறுமதிக்கேற்ப மாதா மாதம் பணத்தைப் பெற்று குறிப்பிட்ட சில வருடங்களின் பின் அந்த வீட்டையே குடியிருப்பாளருக்கு உரிமையாக்கிவிடுவதன் மூலம் வீட்டுப் பிரச்னையும் தீரும்; வீடு கட்டுவதற்கெனப் பணம் பெற்று வேறு தேவைகளுக்குச் செலவுசெய்யவும் நேராது. அரசாங்கமே வீடு கட்டிக் கொடுத்து பணம் அறவிட்டு குடியிருப்பாளருக்கே அந்த வீட்டை உரிமையாக்கும் முறை சில நாடுகளில் செயல்பட்டு வருகிறதென்பது அமைச்சருக்குத் தெரியாததல்ல.

# மனித உரிமைகளை பாதுகாப்பது எங்ஙனம்?

[ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை 1948-ம் ஆண்டு டிசம்பர் 10-ம் திகதி மனித உரிமைகள் சாஸனத்தைப் பிரகடனம் செய்தது. இலங்கைக்கு விரைவில் ஓர் புதிய அரசியல் அமைப்பு வர விருப்பதாலும் அதில் அடிப்படையான உரிமைகள் எவ்விதம் அமைய வேண்டுமென அபிப்பிராயங்கள் வேறுபடக்கூடுமாதலாலும் இக்கட்டுரை இச்சமயத்தில் பொருத்தமானதாயிருக்கும்]

இன்று பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்களாக இருக்கும் சரித்திர நூல்களை வாசித்துப் பார்ப்போமானால், எந்த ஒரு நாட்டின் சரித்திரத்திலும் அல்லது பொதுவாக உலக சரித்திரத்திலும் பெரும்பாலும் ஒரே மாதிரியான விஷயங்களைப் பற்றிய வர்ணனைகள் மலிந்திருப்பதைக் காணலாம். சுரண்டல், கொள்ளை, வழிப்பறி, படையெடுப்பு, போராட்டம், படுகொலை முதலியவையே உற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இவையெல்லாம் மனிதன் மனிதனுக்கு சில அடிப்படையான இன்றியமையாத உரிமைகளை மறுத்து வந்ததே முற்றிலும் காரணம் என்பது தெளிவாகிறது.

காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலத்தில் கல்வியறிவில்லாத காலத்தில், பண்பாடும் பச்சாத்தாபமும் இல்லாத காலத்தில் தற்காப்புணர்ச்சியால் சுயநல வெறி மிகுந்து மனிதன் மற்றவனைப் பிடித்துத் தின்று வாழ்ந்தான் என்று கூறினால் அதை நம்பலாம், ஒப்பலாம். ஆனால் நாகரீக மனிதன் என்று சொல்லப்படுபவன் தோன்றி இற்றைக்கு பதினாயிரம் வருடங்களுக்கு கிட்டவாகிறதே? நாகரீகம் எங்கே போய்விட்டது?

எங்காவது ஒரு நாற்றாண்டொரு தடவை சமத்துவம், நீதி, நெறி, அறம் என்ற குரல் உலகின் மூலையொன்றில் முழங்கியது உண்மைதான், ஆனால் அக்குரலை எழுப்பியவர் ஒரு ஞானியாகவோ, புலவராகவோ, மகானாகவோதான் இருந்திருப்பார். அக்குரலை உலகம் முழுவதும் 'ஓகோ' என்று வரவேற்றதும் உண்மை தான். ஆனால் அதை எழுப்பியவர் மறைய அதுவும் மறைந்துவிட்டது.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற மனித உரிமையை முதலில் பறைசாற்றினார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பூங்குன்றனார். 'யாதானும் நாடாமால் ஊராமால் என்று முழங்கினார் திருவள்ளுவர். 'அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்று உருகினார் நம்பி ஆரூரர் 'உன்னைப்போல் பிறனையும் நேசி' என்று கெஞ்சினார் கிறிஸ்துநாதர். 'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று அழைத்தார் பாரதியார். இப்படியே இன்னும் பலபல பெரியார்கள் தோன்றி 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' என்றும் 'நீயும் வாழ், பிறனையும் வாழ விடு' என்றும் மனித உரிமைத் தத்துவங்களைப் போதித்தார்கள்.

இவை அனைத்தையும் உலகம் பாராட்டிப் புகழ்ந்தது. உன்னதமான லட்சியங்கள் என அவற்றை ஒப்புக்கொண்டு வரவேற்றது. ஆனால் இன்றுவரை அவை வெறும் லட்சியங்களாக எட்டாத கனிகளாக, காணாத கனவுகளாக இருந்து வருகின்றன. காரணம் இது தான்.

### வி. என். பி.

தனிப்பட்ட தீர்க்கதரிசிகள் இத்தத்துவங்களைப் போதித்தனரே அன்றி நாட்டை ஆளுகின்ற பலமும் பொறுப்பும் வாய்ந்த அரசியலார் அவற்றை சட்டத்தின் மூலம் நடைமுறையில் சாதிக்க முன்வரவில்லை.

கிரேக்க சாம்ராஜ்யம் இருந்தபோது அதன் பிரஜைகள் பேச்சு சுதந்திரம், சட்டத்தின் முன் சமத்துவம், சம மரியாதைபோன்ற சில மனித உரிமைகளை அனுபவித்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் பிரான்சிலும் அமெரிக்காவிலும் நிகழ்ந்த மக்கள் சுதந்திரப் புரட்சியும், ரஷ்யப் புரட்சியும், அதற்குப்பின் நடந்த முதலாவது இரண்டாவது உலக மகாயுத்தங்களும் மனித உரிமைத் தத்துவத்துக்கு பல நாடுகளில் சட்டபூர்வமான பாதுகாப்பு ஓரளவுக்கேனும் அளிக்கப்பட்டிருக்கிறது.

1948-ல் ஐ. நா. சபை செய்த மனித உரிமைகள் பிரகடனத்தில் 30 பிரிவுகள் உண்டு முதல் 21 பிரிவுகள் அரசியல், சிவில் உரிமைகள் சம்பந்தமானவை. 22 முதல் 27 வரை பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் சம்பந்தமானவை. 29-வது பிரிவு ஒரு குடிமகன் தான் வாழும் சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றிக் கூறுகிறது. இவ்வுரிமைகளை மீறுவதற்கு எந்த அரசுக்கோ, குழுவுக்கோ, தனிப்பட்டவருக்கோ உத்தரவில்லை என்று 30-வது பிரிவு கூறுகிறது.

ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் எல்லா நாடுகளும் இவ்வுரிமைகளைப் பேணிப் பாதுகாத்து நிலைநாட்டக் கடமைப்பட்டுள்ளன. ஐ. நா. சபை ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முடியாதாகையால் உரிமைகள் மீறப்படும்போது கண்காணிக்கவோ கட்டுப்பாடு செய்யவோ தண்டிக்கவோ அதற்கு அதிகார பலமில்லை. மனிதஉரிமை சாஸனம் அதனால் வகுக்கப்பட்ட ஒரு பொது வழிகாட்டியேயாகும். உரிமைகள் மீறப்படாமல் பாதுகாப்பது ஒவ்வொரு நாட்டினதும் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் ஒவ்வொரு மனிதனதும் தனிப்பெரும் முதற்கண் கடமையாகும்.

# ஐயாறன் எழுதுவது:

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தின் புதிய ஆச்சிரம கட்டிடத் திறப்பு விழாவும், அதை அடுத்து முதலாவது அகில இலங்கை திவ்ய ஜீவன மகாநாடும் வருகிற 12-ந் திகதி முதல் 14-ந் திகதிவரை நல்லூரில் நடைபெறுகின்றது.

இவ் வைபவத்துக்காகவே, உலக திவ்விய ஜீவன சங்கத் தலைவரான சுவாமி சிதானந்தா மகாராஜ் அவர்கள் பூப்பிரதட்சணமாக இலங்கைக்கு 11-ந் திகதி பறந்து வருகின்றார்கள். 11-ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12-30 மணிக்கு கட்டுநாயகா விமான நிலையத்துக்கு வரும் போது அங்கு அவரை எதிர்கொண்டு வரவேற்க யாழ்ப்பாணத்திலிருந்தும் மற்றும் கொழும்பு, கண்டி, திருகோணமலை முதலியபல ஊர்களிலிருந்தும் திவ்ய ஜீவன சங்க பக்தர்கள் கட்டுநாயகாவுக்கு வருகின்றனர்.

விமான நிலையத்திலிருந்து சுவாமிஜி நேரே கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ தம்பையா முதலியார் சத்திரத்துக்கு வருகிறார். அங்கு சிறிய பிரார்த்தனைக்கூட்டப் முடிந்தபின், வெள்ளவத்தை ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்குச் செல்லுகிறார். அன்று மாலை 5 மணிக்கு மியூஸியத்துக்குப் பக்கத்திலுள்ள ஸி. என். ஏ. பி. டி. மண்டபத்தில் நடைபெறும் சர்வசமய மகாநாட்டில் கலந்துகொண்டு பேசுகிறார்.

பிறகு 6-30 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பொதுக் கூட்டத்தில்பேச்சு. மறுநாள் 12-ந் திகதி சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு ரத்மலானையில் விமானத்தில் ஏறி, யாழ்ப்பாணம் வருகிறார்.

ஆறு வருடங்களுக்கு முன்பாக சுவாமிஜி அவர்கள் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில், மேடைமீது சாஷ்டாங்கமாக கீழே விழுந்து பொதுமக்களுக்கு வணக்கம் தெரிவித்த அரியகாட்சியைக் கண்டவர்கள் மறக்க முடியாது. எவ்வளவு எளிமை, எவ்வளவு பண்புமுகம்தான் எவ்வளவு பொலிவு. குரு அருளும், திருவருளும் பூரணமாகவுள்ள சுவாமிஜி அவர்களுக்கு உலகில் பல நாடுகளிலிருந்தும் அழைப்புகள் குவி

ாம் வருவதாக உறுதி கூறியிருந்தார். அப்போது அவர்கள் கூறிய உறுதி இப்போது நிறைவேறுகிறது. அமெரிக்காவிலிருந்து கீழை நாடுகள் வழியாக பூமியை வலம் வந்து, ஓர் இரவு மட்டும் கொழும்பில் தங்கிவிட்டு, யாழ்ப்பாண புண்ணிய பூமிக்குப் பறந்து வருகின்றார்கள்!

அப்பெரியாரை காண்பதும், அவர் கூறும் பொன்மொழிகளைக் கேட்பதும் அவரது அருளைப் பெறுவதும் நம் வாழ்க்கையைப் புனிதப்படுத்தும் அமெரிக்கர் பெரும் செலவில் பெற்ற அரிய பேறு, யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு இறை அருளால் எளிதில் கிடைக்க இருக்கின்றது. கிடைத்தற்கரிய இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்பவர்கள் பாக்கியவான்கள். இம்மைக்கும் மறுமைக்கும் நலம் கிடைக்கும், எல்லாம் அவரவர்கள் மனப்பான்மையையும் நம்பிக்கையையும் பொறுத்தது.

12-ம் திகதியிலிருந்து மூன்று நாட்கள் அகில இலங்கை திவ்ய ஜீவன சங்க மகாநாடு யாழ்ப்பாணம் புதிய தெய்வீக மண்டபத்தில் கூடுகிறது. வந்துகலந்துகொள்பவர்களுக்கான வசதிகள் எல்லாம் செய்யப்படுகின்றன. சுவாமிஜீ அவர்கள் அக்கட்டிடத்திலேயே மூன்று நாட்களும் தங்கி பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்கின்றார்கள். இச்சமயத்தில் யாழ்ப்பாணத்தில் இருக்க வேண்டுமென்று எவ்வளவோ ஆவல். கொழும்புக்கு வரவேண்டி ஏற்பட்டுள்ளது இங்கேயே தரிசிக்கின்றேன்

முன்னர் நமது 'ஈழநாடு' காரியாலயத்தில் அவரது பொன்னடிகள் பட்டன. காரியாலயத்திற்கு வந்து அருளாசி கூறியதுடன், ஒரு பஜனையும் நடத்தியதை என் உள்ளம் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

பாப்பரசர் ஈழம்வந்தபோது இங்குள்ள லட்சக்கணக்கான கத்தோலிக்க மக்களின் குருபக்தியைக்காணக் கூடியதாக இருந்தது ஈழத்து இந்துமக்கள் தங்கள் குருபக்தியைக்காட்டி அவரது அருளைப்பெறுவதற்கு இது நல்லதோர் சமயமாகும். 0 0 0

# சர்வதேச அபிவிருத்திக்கு கல்வியில் சமசந்தர்ப்பம் வேண்டும்

— மகிந்தா ரலபாவை —
(செயலாளர், இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு)

சர்வதேசக் கல்வி ஆண்டைக் கொண்டாடும் முகமாக இலங்கை யுனஸ்கோ தேசிய ஆணைக்குழுவும், ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்க வடகிளையும் இணைந்து நாளை மாலை கருத்தரங்கம் ஒன்றை நடாத்துகின்றன. "சோஸலிசத்தை நோக்கி முன்னேறும் ஒரு நாட்டுக்கான

தேவை[illegible]யான கிடைக்கக் கூடிய[illegible] மூலாதார சக்திகளை தக்கவாறு பயன்படச்செய்தல்.

4. சர்வதேச ஒருமைப்பாட்டினை வளர்த்தல்.

ஐ. [illegible]. 1970-ம் ஆண்டு

ஆண்டுடன் தொடர்[illegible] பூண்டு இலங்கையிலேக[illegible] சம்பந்தமான மறுமலர்ச்சியை ஏற்படுத்த தாண்டுகோலாகவும் அமைகின்றது.

1970-ம் ஆண்டு இலங்கை

திருமதி ஆர் ஆர் நவரத்தினம், (இளைப்பாறிய கல்வி அதிபதி) கலாநிதி கா. சிவத்தம்பி (விரிவுரையாளர் வித்தியோதய பல்கலைக்கழகம்) திரு ஆ தியாகராசா (பா. உ) திரு மு கார்த்திகேசன் (ஆசிரியர் யாழ் இந்துக்கல்லூரி) திரு எம் றலப்பனுவ (செயலாளர், இலங்கை, யுனெஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்தாரமுள்ள வீடுகளைக் கட்ட விண்ணப்பிப்பவர்களுக்கு 25,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படும். (5) மாதம் 1500 ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுவோருக்குக் கடன் வழங்கப்படமாட்டாது.

அறவிட்டு குடியிருப்பாளருக்கே அந்த வீட்டை உரிமையாக்கும் முறை சில நாடுகளில் செயல்பட்டு வருகிறதென்பது அமைச்சருக்குத் தெரியாததல்ல.

## லக்ஸபானு மின்சாரம்

லக்ஸபானு நீர் வீழ்ச்சி மின்சாரம் வடபகுதிக்கு வந்துவிட்டது. அடிக்கடி இருளில் மூழ்கிவந்த அவல நிலை இனியும் ஏற்படாதென்று நம்புகிறோம். தெற்கிலிருந்து மின்சாரம் வடக்கே வருமாஎன்ற ஐயமும், திட்டமிட்டபடி இந்த ஆண்டுக்குள் மின்சாரம் இங்கு வந்துசேர்ந்துவிடுமாவென்ற அச்சமும் நீங்கிவிட்டது. துரிதமாக இப்பணியைச்செய்து முடித்த மின்சார இலாகாவினரையும் அமைச்சையும் பாராட்டவேண்டும்.

மின்சாரம் வீதிகளுக்கும் வீடுகளுக்கும்வெளிச்சத்தைக் கொடுப்பதுடன் தனது பணியைமுடித்துக் கொள்வதல்ல தொழில் விருத்திக்கும் விவசாய விருத்திக்கும் மின்சாரம் அத்தியாவசியமானது. வடபகுதிக்கு லக்ஸபானு மின்சாரம் வந்துசேர்ந்துவிட்டதால் இப்பகுதியில் கைத்தொழில்களை நவீனமயமாக்கவும் புதிய புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் அரசாங்கத்தின் உதவியையும் ஒத்துழைப்பையும்பெறுவதற்கு இப்பகுதியிலுள்ள தொழில் துறையினரும் ஆட்சிமன்றப்பிரதிநிதிகள்மற்றும்பிரமுகர்களும் ஓர்ஆலோசனைச்சபையை நிறுவிதகுந்தமுயற்சிமேற்கொள்ள வேண்டும்.

# ‘சமசம்பளம், சமவாய்ப்பு எமக்கு வேண்டும்’

## சம்பளக் கமிஷன் முன் பண்டிதர் கழகம் சாட்சியம்

‘பருத்தித்துறை, புதன் வித்துவான், பண்டிதர், புலவர்மாரும் நான்கு வருடங்கள் படித்துப் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்கள். தமிழ்மொழி, இலக்கியம், இலக்கிய வரலாறு, இரண்டாம் மொழிபோன்ற பாடவிதானங்கள்; பட்டதாரிப் பரீட்சைக்குரிய விதானங்களிலும் பரந்துபட்டதுடன் ஆழமானவை. இந் நிலையை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றபின்னரும் எமக்குச் சமசம்பளம், சமசந்தர்ப்பம் தருவதில் தாமதிப்பது வருந்தத்தக்கது.’

இவ்வாறு கடந்த வாரம் சம்பளக் கமிஷன் முன் சாட்சியமளித்த ஈழத்துப் பண்டிதர்சங்கம் கூறியுள்ளது. தூதுகோஷ்டியில் வித்துவான் க. கார்த்திகேசு பண்டிதர் த கிருஷ்ண பிள்ளை, பண்டிதர் க. நாகலிங்கம், புலவர் க ஆறுமுகம், புலவர் ந. சிவபாதசுந்தரனார் ஆகியோர் இடம் பெற்றனர்.

மேலும் அவர்கள் கூறியதாவது:

க. பொ. த. உயர்தர வகுப்புகளில் தற்பொழுது கடமையாற்றும் சிங்கள பண்டிதர்மார் 144 பேர் இன்றுபட்டதாரிகளின் சம்பளம் பெறுகின்றனர். தமிழ்ப் பண்டிதர்களுக்கு இன்னும் இவ்வித வாய்ப்பளிக்கப்படவில்லை. எமக்கும் பட்டதாரிகளுக்குரிய சம்பளம் தரவேண்டும். மேலும் பயிற்றப்பட்ட பண்டிதர் வித்துவான் புலவர்மாருக்குப் பயிற்றப்பட்ட பட்டதாரிகளின் சம்பளம் தரப்படுவதுடன் எவ்வித நிபந்தனையுமின்றி பதவிஉயர்ச்சி விடயத்திலும் சமசந்தர்ப்பமளிக்க வேண்டும்.

## தீர்மானம்

உரும்பராய், புதன் கோப்பாய்கிராமசபைஎல்லைக் குட்பட்ட பகுதிக்கான கூட்டுறவுச் சமாசத்தை கோப்பாய் மத்திய பகுதியில் நிறுவவேண்டும் என்ற தீர்மானம் கோப்பாய்கிராமசபையில் நிறைவேற்றப்பட்டது.

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வடகிளையும் இணைந்து நாளை மாலை கருத்தரங்கம் ஒன்றை நடாத்துகின்றன. ‘‘சோஸலிசத்தை நோக்கி முன்னேறும் ஒரு நாட்டுக்கான கல்வி அமைப்பு’’ என்னும் பொருள்பற்றிய இக்கருத்தரங்கு மாநகரசபை மண்டபத்தில் இடம் பெறும். இதனையொட்டி இலங்கை யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு செயலாளர் திரு. மகிந்தா ரலபாவை அனுப்பிவைத்துள்ள செய்தி இங்கு பிரசுரமாகிறது,

இலங்கை யுனெஸ்கோ தேசியஆணைக்குழு ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கம் யாழ்ப்பாணக் கிளையுடன் இணைந்து சர்வதேசக் கல்வி ஆண்டு பற்றிய கருத்தரங்கு ஒன்றைநடாத்துவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

‘‘ஐக்கியநாடுகள் சபை 1970-ம் ஆண்டினைச் சர்வதேசக் கல்வி ஆண்டாகப் பிரகடனஞ் செய்துள்ளது. யுனெஸ்கோ ஐக்கிய நாடுகள் சபையினது கல்வி சம்பந்தமான விசேட குழுவாகையினுல் சர்வதேசக் கல்வி ஆண்டுத் திட்டத்தைச் செவ்வனே செயற்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது.

சர்வதேசக் கல்வி ஆண்டு உலகெங்கும் அளாவிய ஒரு பெரும் பணியாகும். இது கல்வியைச் சீர் திருத்திப் பரவச்செய்து கல்வி சம்பந்தமான பிரச்சனைகளை ஆராய்ந்து ஒப்புநோக்கி எல்லா வழிகளிலும் தக்க பயிற்சி அளிக்கவல்லதாகும். கற்பித்தல்முறையிலே புதிய முறைகளைப் புகுத்துவதும் கல்வி சம்பந்தமான மாற்றங்களைப் பொதுமக்களின் கவனத்துக்கு எடுத்துக் காட்டுவதும், தேவைப்படும் பொழுது நிருவாகக் கொள்கை சம்பந்தமான மாற்றங்களை மேற்கொள்வதும் இதன் பணிகளாகும்.

ஆகையால் சர்வதேசக் கல்விஆண்டு சாதாரணமாக நடைபெறும் ஒரு விழாவாகக் கருதப்படாமல் அதற்கும் மேலானதாக அமைந்துள்ளது.

சர்வதேசக் கல்வி ஆண்டு நான்கு முக்கிய நோக்கங்களை முன்வைத்து அவற்றைச் செயற்படுத்துவதைத் தன் தலையான பணியாகக் கொண்டுள்ளது. அவையாவன:-

1. உலகெங்கும் இன்று காணப்படும் சூழ்நிலையை ஆராய்ந்து மதிப்பிடுதல்.

2. கல்வியை வளர்க்கவும் சீர்திருத்தவும் ஏற்படும் முக்கியமான தேவைகளில் அதிககவனம் செலுத்துதல்.

3. கல்வி வளர்ச்சிக்குத் தேவையான ... கூடிய மூலாதார சக்திகளை தக்கவாறு பயன்படச்செய்தல்.

4. சர்வதேச ஒருமைப் பாட்டினை வளர்த்தல்.

ஐ. நா. 1970-ம் ஆண்டினைத் தெரிவுசெய்தமைக்கு தக்க காரணமும் உண்டு. முதலாவது ஐ நா அபிவிருத்திப் பருவம் பூர்த்தியாகி இரண்டாவது அபிவிருத்திப் பருவம் ஆரம்பமாக இருக்கிறது. ஆகையால் 1970 இவற்றுக்கிடையே மாற்றத்துக்குரிய முக்கிய ஆண்டாகும். அபிவிருத்திக்குக் கல்வியின் முக்கியத்துவம் என்ன என்பது பற்றி உலகில் எந்நாட்டிலாவது இன்று ஒருகேள்விக்குறியிராது எனினும் அபிவிருத்திக்கு எவ்வாறு கல்வி உதவுகின்றது, அபிவிருத்தியின் சூழலுக்கேற்ப எவ்விதமான கல்வி தேவைப்படுகின்றது என்பன இன்னும் நன்கு அறிந்துகொள்ளப்படாமலேஇருக்கின்றன. மேலும் உலகம் கல்வி சம்பந்தமான நெருக்கடி ஒன்றினை எதிர்நோக்கிக்கொண்டிருப்பதனுலும் 1970 சர்வதேச கல்விஆண்டாகத் திகழப் பொருத்த முடையது.

இன்று பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிற் பெரும் பாலரனோர் 21 ம் நூற்றூண்டில் முதியவர்களாக தம் வாழ்நாளை கழிக்க இருக்கின்றவர்களாகும். ஆனுல் இன்றும் அவர்கள் 19 ம் நூற்ருண்டு முறையிலே கல்வி கற்று வருகின்றூர்கள். எனவே இரண்டாவது பத்தாண்டு அபிவிருத்திப் பருவம் தனது குறிக்கோளை பூர்த்தி செய்வதாயின் அதற்கு ஏற்ற முக்கிய கருவியான கல்வி அதிக கவனத்துக்குரியதா வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை 1970 ம் ஆண்டு இன்னெருவகையில் முக்கியத்துவமடைகிறது. ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் புத்தபெருமானின் போதனைகளை உள்ளடக்கிய ‘திரிபீடகம்’ பௌத்தகுருமார் வாய்மொழியாகக் கேட்கப்பட்டுவந்த நிலையில் இருந்து எழுத்துருவில் பொறிக்கப்படும் நிலையினை மாத்தளை அலுவிகாரை ஆலயத்தில் எய்தலாயிற்று. அதனுல் தலைமுறை தலைமுறையாக வாய்மொழியாக கேட்கப்பட்டு வந்த நூல் பொதுமக்கள் பலருக்கும் பயன்படத்தக்கதான நிலையில்எழுதப்பட்டதால் புதியதோர் மறுமலர்ச்சியினை கல்வித்துறையிலே ஏற்படுத்தலாயிற்று. ஆகையால் சர்வதேச கல்வி ஆண்டு இவ்வாறு இலங்கையின் சரித்திரசம்பந்தமான ... பூண்டு இலங்கையிலே கல்வி சம்பந்தமான மறுமலர்ச்சியை ஏற்படுத்த ஆண்டுகோலாகவும் அமைகின்றது.

1970-ம் ஆண்டு இலங்கையில் கல்வி மறுமலர்ச்சி ஏற்படவிருக்கும் வேளையில் கல்வி அபிவிருத்திக்கு ஏற்றவாறு சட்ட பூர்வமான சரியான வழியிலே கல்வியைப் பெறுவதற்குரிய எல்லாவிதத் தடைகளையும் நீக்கி சமசந்தர்ப்பத்தை யாவர்க்கும் அளிப்பது சர்வதேச அபிவிருத்திக்கு ஏற்றவாறு பாடத்திட்டத்திலே அபிவிருத்தியை ஏற்படுத்த வல்லதாகும்.

### கருத்தரங்கம்

நாளை மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச கல்வி ஆண்டை ஒட்டிய கருத்தரங்கில் திரு. ஹண்டி பேரின்பநாயகம் திரு. எல். ஆரியவன்ச, (பொதுச் செயலாளர் ஸ்ரீ லங்கா ஜாதிக குருசங்கம்) திரு. ஏ எஸ் கனகரத்தினம் (முன்னுள் தலைவர் வடமாகாண ஆசிரியர் சங்கம்) ... ராசா (பா. உ) திரு மு கார்த்திகேசன் (ஆசிரியர் யாழ் இந்துக்கல்லூரி) திரு எம் றலப்பனுவ (செயலாளர், இலங்கை, யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழு) ஆகியோர் பங்குபற்றுவர்.

கலாநிதி க. கைலாசபதி தலைமையில் கருத்தரங்கம் நிகழும் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம், சமநிலை நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். வடமாநிலக் கல்வி அதிபதி திரு சங்கரலிங்கம்விழாவை ஆரம்பித்துவைப்பார். திரு வ கிருஷ்ணபிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார்

## திருட்டுப்போன பொருட்கள் மீட்கப்பட்டன

ஆனைக்கோட்டை, புதன் ஆனைக்கோட்டை வடக்கைச் சேர்ந்த பொன்னையா என்பவரிடமிருந்து களவாடப்பட்டதாகக் கருதப்படும் ரூபா 450, தாலிக்கொடி மோதிரம் என்பவற்றை ஆனைக்கோட்டைப் பொலிசார் மீட்டுள்ளனர். இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கல்லூரி மாணவன் ஒருவரும், கைம்பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது

......

## தற்கொலை

முசலி, புதன் பரிகாரிகண்டல் என்னும் கிராமத்தைச் சேர்ந்த லட்சுமி என்ற விவாகமான இளம்பெண் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். 25 வயதான இவர் மூன்று பிள்ளைகளுக்குத் தாயாவார்,

இறந்தவரின் கணவரான சுப்பையா வாக்குமூலம் அளிக்கையில் இறப்பதற்கு முதல்நாள் மனைவிக்கும் தனக்குமிடையே சிறு வாக்குவாதம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார். நானுட்டான் கிழக்கு மரணவிசாரணை அதிகாரி திரு. ஜே. சி. கிருபைரத்தினம் விசாரணை நடத்தித் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## ஒரே சூலில் 6 குழந்தைகள்

லேகோஸ், டிச. 9 நைஜீரியாவில் ஒரு பெண் 6 பிள்ளைகளை ஒரேசூலில் பெற்றெடுத்தார். இக்குழந்தைகளில் இரண்டு இறந்து விட்டன. மற்றநான்கு குழந்தைகளும் தாயும் நலமுடன் இருக்கிறூர்கள். இதற்குமுன்பும் இப்பெண் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றிருக்கிறூர்.

## இடமாற்றம்

நாவற்குழி, புதன் யாழ் ஆஸ்பத்திரியில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. இ. சோமசுந்தரம் அடுத்தமாதம் முற்பகுதியில் ருகமை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

நாவற்குழி, புதன் நாவற்குழி புகையிரத நிலைய அதிபர் திரு எம் தியாகராசா அடுத்தமாத முற்பகுதியில் நாவலப்பிட்டிப்பகுதியிலுள்ள கங்குறுேயா புகையிரதநிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

......

## பன்முகத் தொழிற் பயிற்சிக்கூடம்

சாய்ந்தமருது, புதன் நிந்தவூர் அல்-அஸ்ரக் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பன்முகத் தொழிற்பயிற்சிக்கூடம் ஒன்றுபெரும் பணச்செலவில் கட்டப்பட்டுவருகிறது.

நிந்தவூர் எம். பி. ஜனுப் எம். எம். முஸ்தபா இதற்கான முயற்சியைச் செய்துள்ளார்.

... பொலிவு. குரு அருளும், திருவருளும் பூரணமாகவுள்ள சுவாமிஜி அவர்களுக்கு உலகில் பல நாடுகளிலிருந்தும் அழைப்புகள் குவிகின்றன. தலைமை ஸ்தாபனமான இமயமலை ரிஷிகேசத்திலிருந்து 30 மாதங்களுக்கு முன்பாக, தெய்வீக யாத்திரை புறப்பட்டார்கள். அதாவது மக்களையெல்லாம் தெய்வீகமாக மாற்றும் திருப்பணியில், தென்னுபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேஷியா முதலிய பல நாடுகளுக்கும் பூப்பிரதட்சணமாகச் சென்றூர்: அமெரிக்காவிலே பல மாதங்கள் தங்கியிருந்து. பல்லாயிரக்கணக்கான அமெரிக்க மக்களுக்கு மனச்சாந்தி அளித்து, புதிய தெய்வீக வாழ்க்கைக்கு நல்வழி காட்டினூர்கள். இப்போது அமெரிக்காவில் யோகாசனங்களுக்குமிகவும் மதிப்பு. அநேகமாக எல்லா முக்கியநகரங்களிலும்யோக அசிரமங்கள் ஏற்பட்டுவருகின்றன.

திவ்விய ஜீவன சங்கத்தின் கிளைகள் பல ஊர்களிலும் நிறுவப்பட்டுள்ளன. சுவாமி சிவானந்தரின் சிஷ்யரான சுவாமி விஷ்ணு தேவானந்தா பல்லாண்டுகளுக்கு முன்பாக இலங்கை மார்க்கமாக அமெரிக்காவுக்குச் சென்று, அங்கு யோக ஆசிரமத்தைப் பல இடங்களில் ஸ்தாபித்தார். அமெரிக்கர்களுக்கு அவர்மீது மிக மதிப்பும் பக்தியும், எல்லா வசதிகளையும் அவருக்கு இப்பணிக்காகச்செய்து தந்திருக்கிறூர்கள் அவர்கள் அளித்துள்ள ஒரு விசேஷ விமானத்தில் சுவாமி பல ஊர்களிலுமுள்ள தமது ஆச்சிரமங்களுக்குப் பறந்து சென்று அருட்பணி செய்கின்றூர். பிரயாணத்தில் காலத்தை விணுக்கக்கூடாதென்பதே நோக்கம்.

உலக திவ்ய ஜீவன சங்கத்தின் தலைவர் சுவாமி சிதானந்தர், அமெரிக்காவின் அழைப்பை ஏற்று, அங்கேயே தமது ஆசிரமத்தில் பல மாதங்கள் தங்கி, தொடர்ந்து அருட்பணி செய்துவந்தார்.

யாழ்ப்பாணத்தில் 1961-ம் வருடம் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் நல்லூரிலே, திவ்ய ஜீவன சங்கத்துக்கு அத்திபாரக்கல் நாட்டினூர்கள், பல வருடகாலம் வேலை நடைபெறவில்லை, சென்ற 1964-ம் வருடத்தில் சுவாமி சிதானந்தா அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தபோது. இந்த ஆசிரம மண்டபத்தை பூர்த்திசெய்தால், அதன் திறப்பு விழாவுக்காகவே ... த்து இந்துமக்கள் தங்கள் குருபக்தியைக்காட்டி அவரது அருளைப்பெறுவதற்கு இது நல்லதோர் சமயமாகும். 0 0 0

‘தந்தை தாய் ஆவானும் சார்கதி இங்காவானும் அந்தமிலா இன்பம் நமக்கு ஆவானும், எந்தமுயிர் தாமாகுவானும் சரணுகுவானும் அருட்கோனுகுவானும் குரு’

—

## கடையில்களவு

மாவிட்டபுரம் புதன் மல்லாகத்தைச் சேர்ந்த கே. இரத்தினம் என்பவரது கடை இரவு நேரம் உடைக்கப்பட்டு ரொக்கப் பணமும் மற்றும் பொருட்களும் திருடப்பட்டுள்ளதாய் பொலிஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்துவந்த கைவிரல்அடையாளநிபுணர்கள் கடையில் காணப்பட்ட கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்துள்ளனர்.

சுன்னுகம் பொலிஸ்இன்ஸ்பெக்டர் எஸ். நவரத்தினராசா இதுபற்றித் தீவிர புலன் விசாரணை செய்துவருகின்றூர்.

...—

## எதிர்மனுதார் ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வழ: ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு பொறுப்பாக இருந்தீர்? — ஆம்.

வழ: எதிர்மனுதாரருக்கு எப்பொழுது கடைசியாக சம்பளம் வழங்கப்பட்டது? —21-3-70ல.

வழ:70-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் எதிர்மனுதாரருக்கு சம்பளம் வழங்கப்பட்டதா? —இல்லை.

வழ: சம்பளப் பட்டியலில் அவர் பெயர் இருந்ததா?— இல்லை,

வழ: அவரது சம்பளம் ஏன் ஏப்ரல் மாதத்துக்கு வழங்கப்படவில்லை?- அவர் அதிபராக வேலை பார்க்கவில்லை.

வழ: அதற்குப்பின் அவர் எப்போதாவது காரைநகர் இந்துக்கல்லூரியில் கடமையாற்றினுரா?- இல்லை.

வழ: வேறு கல்லூரிகளில் வேலை பார்த்தாரா?- எங்கள் கல்லூரிகளில் வேலை பார்க்கவில்லை,

வழ: எங்கள் கல்லூரிகள் என்றுல்?- அரசாங்க பாடசாலைகளில்.

தேர்தல் அதிகாரி வி. நடராசா, பென்சன் இலாகாவைச் சேர்ந்த மார்க்கண்டு இரத்தினசிங்கம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். விசாரணை இன்றுகாலை தொடர்ந்து நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org